# வானவில்

# VAANAVIL

இதழ் 136 சித்திரை 2022

ISSUE 136 APRIL 2022


# மக்கள் வெறும் பகடைக் காய்கள் மட்டுமே!



இலங்கையில் தற்போது பதவியில் இருக்கும் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பதவி விலகக் கோரி எதிர்க்கட்சிகளாலும், 'பொதுமக்கள்' என்ற பெயரிலும் நடத்தப்பட்டு வரும் போராட்டங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

ஆரம்பத்தில் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டம் என ஆரம்பிக்கப்பட்ட இப் போராட்டம் தற்பொழுது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளினதும் 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பதவி விலகும்படியும் கோரி நிற்கிறது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருள் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வைக் காரணம் காட்டியே இந்தப் போராட்டம் ஆரம்பமானது. அதனுடன் ராஜபக்ச குடும்பத்துக்கு எதிரான போராட்டமாகவும் அது சித்தரிக்கப்பட்டது. பின்னர் முழு அரசாங்கமும் ஊழல் மோசடியில் ஈடுபட்டதால் ஜனாதிபதியும் பிரதமரும் முழு அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என உரு மாறியது.

ஆர்ப்பாட்டம் செய்பவர்களின் கருத்து இரண்டு விதமாக உள்ளது. ஒன்று, இலங்கையில் மட்டும்தான் இத்தகைய பொருளாதார நெருக்கடி தோன்றியுள்ளது என்றும், அதற்கு இன்றைய அரசாங்கம் பின்பற்றி வரும் கொள்கைகளே காரணம் என்பதும். இரண்டாவது, ராஜபக்ச குடும்பம் பெரும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதால்தான் நாட்டுக்கு இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்பது.

உண்மையில் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி இலங்கைக்கு மட்டும் உரித்தான ஒன்றல்ல என்பதை ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் கவனிக்கிறார்கள் இல்லை அல்லது தெரியாதது போல நடிக்கிறார்கள். இன்றைய பொருளாதார நெருக்கடி என்பது இலங்கை போன்ற சகல வளர்முக நாடுகளையும் மட்டுமின்றி, வளர்ச்சியடைந்த மேற்கு நாடுகளையும் விட்டு வைக்கவில்லை.

உலகளாவிய இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு அடிப்படையான காரணம் வளர்ச்சி அடைந்த நாடுகளின் உலகமயக் கொள்கையாகும். வளர்ச்சி அடைந்த நாடுகள் உலகின் முன்னணி நிதி நிறுவனங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதுடன், வளர்முக நாடுகளை ஈவிரக்கம் இன்றிச் சுரண்டியும் வருகின்றன.

அடுத்ததாக, கடந்த இரு வருடங்களாகத் தொடரும் கொவிட் – 19 என்ற பெருந்தொற்று சகல நாடுகளினதும் பொருளாதார நடவடிக்கைகளைக் கடுமையாகப் பாதித்துள்ளது.

இன்னொன்று, ரஸ்ய – உக்ரைன் போர் ஏற்படுத்தியுள்ள தாக்கம். இந்தப் போரைக் காரணமாக வைத்து அமெரிக்காவும் அதன் மேற்கத்தையக் கூட்டாளி நாடுகளும் ரஸ்யா மீது சுமார் 400 வரையான பொருளாதார மற்றும் அரசியல் தடைகளை விதித்துள்ளன. இதனால் உலகப் பொருளாதாரக் கட்டமைப்பே ஆட்டம் கண்டுள்ளது. முக்கியமாக எரிபொருட்களின் விலைகள் அதிகரித்து சகல நாடுகளிலும் வரலாறு காணாத பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவே தனது நீண்டகாலத் தேவை கருதி நிலத்துக்கு அடியில் சேமித்து வைத்துள்ள எரிபொருளை வெளியே எடுத்துப் பயன்படுத்தும் நிலை உருவாகி உள்ளது.

இந்த நிலைமையில், முழுக்க முழுக்க உலகப் பொருளாதாரக் கட்டமைப்பில் தங்கியுள்ள இலங்கை இந்த நிலைமையால் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு கடந்த காலத்தில் அந்நியச் செலாவணியை ஈட்டித் தந்த வெளிநாட்டு வேலை வாய்ப்புகள், உல்லாசப் பயணத்துறை, தேயிலை மற்றும் ஆடை ஏற்றுமதி என்பன கொவிட் பெருந்தொற்றுக் காரணமாக பெரும் வீழ்ச்சியைக் கண்டுள்ளன. அதன் காரணமாகவே டொலர்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க…**

**நூறு சிந்தனை மலரட்டும்**

# நெருக்கடி காலங்களில் சதா பொய்யுரைக்கும் ஊடகங்கள்

இலங்கை தற்போது பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. இந்த நெருக்கடிக்குக் காரணம், 40 ஆண்டுக்கு மேலாக இலங்கையின் நிதி நிலைமை மிகவும் மோசமான நிலையில் இருந்து வந்ததே. இலங்கைக்கு 51 பில்லியன் அமெரிக்கன் டொலர் வெளிநாட்டுக் கடன் உள்ளது. ஆனால் இலங்கையின் கையிருப்பில் தற்போது 2.1 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே (இதுவரையில் உறுதியளிக்கப்பட்டுள்ள கடனுதவிகள் சேர்க்கப்படவில்லை) இருக்கின்றன. உணவு, மருந்து மற்றும் எரிபொருள் போன்ற அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கே கையிருப்பிலுள்ள அந்நியச் செலவாணி போதுமானதாக இல்லை. அப்படியிருக்கையில் வெளிநாட்டுக் கடனை மீளச்செலுத்துவது எப்படி? இதனால் நிலுவையில் உள்ள அனைத்து வெளிநாட்டு கடன்களின் மீள்செலுத்துகையை குறுகிய காலத்துக்கு இடை நிறுத்தியுள்ளதாக இலங்கை அரசு அண்மையில் அறிவித்துள்ளது.

அந்நியச் செலாவணி மிகக் குறைந்த அளவிலிருப்பதால், அத்தியாவசிய பொருட்களின் இறக்குமதி மீது கட்டுப்பாடுகளை விதித்தும், பொருட்களின் விலைகளை உயர்த்த வேண்டிய நிலையிலும் இலங்கை அரசு உள்ளது. இதனால் பொருட்களுக்கு தட்டுப்பாடும் விலைவாசியும் அதிகரித்துள்ளன. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களும், பல்வேறு வன்முறை நடவடிக்கைகளும் நாளாந்தம் இடம்பெற்று வருகின்றன. அத்துடன் தற்போதைய அரசாங்கத்தை பதவி விலகக்கோரி காலிமுகத்திடலிலும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கை அரசுக்கெதிராக ஏதோ இலங்கை மக்கள் அனைவருமே திரண்டு போராடுவது மாதிரியும், இலங்கை அரசு இதோ கவிழ்ந்துவிடுமென்ற மாதிரியுமான செய்திகளை இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ள பல தமிழ், சிங்கள, ஆங்கில ஊடகங்கள் பரப்புரை செய்த வண்ணமுள்ளன. அத்துடன் திகிலூட்டும் வகையில் பரபரப்பான பொய்களையும் கட்டவிழ்த்து விடுகின்றன. இதற்கு உதாரணமாக கீழேயுள்ள இரண்டு செய்திகள்:

*‘கொழும்பில் தரையிறங்கிய மூன்று இந்திய இராணுவ விமானம். நேற்று நள்ளிரவு, ஸ்ரீலங்காவில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை கருத்தில் கொண்டு, இந்தியா அதன் நட்பு நாடான இலங்கையை, பாதுகாக்கும் நோக்கில் டெல்லி இந்திய விமானப் படைத் தளத்தில் இருந்து 180 இந்திய இராணுவ வீரர்களுடன் ஒரு விமானமும் பஞ்சாப் ரெஜிமெண்டில் இருந்து 215 இராணுவ வீரர்களுடன் ஒரு விமானமும் தமிழ்நாடு, தாம்பரம் இந்திய இராணுவத் தளத்திலிருந்து மெட்றாஸ் ரெஜிமென்ட் படையை சேர்ந்த 200 இராணுவ வீரர்களும், முதல் கட்டமாக… கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையம் வந்து இறங்கி உள்ளார்கள்’* என பிரதமர் மோடியின் புகைப்படத்துடன் கூடிய பதிவு பகிரப்பட்டுள்ளது.

*‘இலங்கை வாழ் மக்கள் விரும்பினால் இலங்கையை இந்தியாவின் ஒரு பகுதியாக(மாநிலமாக) அறிவிக்க தயாராக உள்ளோம். அத்துடன் தற்போது இருக்கும் நெருக்கடியான பெட்ரோல், டீசல், எரிவாயு, உணவுப்பொருட்கள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து அதன் விலைகளை உடனடியாக குறைப்போம். மேலும், இலங்கையில் இருக்கக்கூடிய கடன் பிரச்சினைகள், தொழில் பிரச்சினைகள் போன்ற விடயங்களையும் தீர்த்து வைக்க கட்டம், கட்டமாக நடவடிக்கைகள் எடுக்க தயாராக உள்ளோம்’* என்று தனது சொந்த ருவிட்டர் மூலம் இலங்கை மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் படத்துடன் செய்தி வெளியிடப்பட்டது.

மற்றொரு செய்தி, உகாண்டாவைச் சேர்ந்த செரனிற்றி குரூப் (Serenity Group Ltd) நிறுவனத்தையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் இணைத்து சமூக ஊடகங்களில் வெளிவந்தது. அதற்கு அந்நிறுவனம் விடுத்துள்ள பகிரங்க அறிக்கையொன்றில், ‘பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உகாண்டாவில் உள்ள தமது நிறுவனங்களில் 10 பில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு செய்துள்ளதாக குற்றஞ்சாட்டி, ஊடகங்களில் கட்டுரையொன்று பரவலாக பரவி வருவதாக தமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதாகவும், இந்த கூற்றுக்கள் மற்றும் குற்றச்சாட்டுகள் தவறானவை, ஆதாரமற்றவை, பொய்யானவை என்று திட்டவட்டமாகவும் உறுதியாகவும் நிராகரிக்கின்றோம்’ எனத் தெரிவித்துள்ளது.

இறுதியாக சமூகவலைத்தளங்களில் வந்த செய்தி, இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நோயுற்று ஆஸ்பத்திரியொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது. அதற்கு, ‘தான் சிறந்த தேக ஆராக்கியத்துடன் இருப்பதாகவும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக வெளிவந்துள்ள செய்திகளை முற்றாக நிராகரிப்பதாகவும், ஒரு நோயாளியைப் பார்ப்பதற்குக் கூட தான் ஆஸ்பத்திரியின் பக்கம் செல்லவில்லையென்றும்’ என பிரதமர் பத்திரிகைகளுக்கு கூறியுள்ளார்.

இவ்வாறு ஏராளமான கட்டுக்கதைகள் நாளாந்தம் ஊடகங்களில் வெளிவந்தவண்ணமுள்ளன. இதனைப் பார்க்கையில் இலங்கைப் போராட்டங்கள் ஒன்றும் திடீரென்று, சில வாரங்களுக்கு முன்னர் முளைத்திருக்க வாய்ப்பில்லையென்றே தோன்றுகின்றது. இதற்கு நீண்டகாலத் தயாரிப்பும் அந்நிய சக்திகளின் பின்னணியும் மிக, மிக அவசியம். ரணில்-மைத்திரி இணைந்த நல்லாட்சி அரசாங்கம் மக்களின் ஆதரவை இழந்து, ஆட்சி மாற்றமென்பது தவிர்க்க முடியாதென்ற நிலைமை 2017 ஆம் ஆண்டளவில் உருவானது. அப்போதே, புதிய ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான வியூகங்களும் வகுக்கப்பட்டிருக்கலாம். இதற்கு காரணம், ராஜபக்ஷ குடும்பத்தினர் சார்ந்த எந்தவொரு அரசாங்கமும் மேற்குலகின் கைப்பொம்மைகளாக இருக்கமாட்டார்கள் என்பதே.

இலங்கையின் பொருளாதாரம் முகம்கொடுக்கும் பாரிய பிரச்சினை டொலர் பற்றாக்குறை ஆகும். இதனால் அரசு உடனடியாக செய்ய வேண்டியது டொலர் பற்றாக்குறை ஏற்படக் காரணமான விடயங்களை நன்கு ஆராய்ந்து, அவற்றுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்து, டொலர் கையிருப்பை அதிகரிப்பதாகும். தற்போதைய பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்து மீள்வது ஒரு வாரத்திலோ, ஒரு மாதத்திலோ, ஏன் ஒரு சில வருடங்களிலோ செய்ய முடியாத ஆச்சரியமான விடயம் என்பதை இலங்கையர்கள் அனைவரும் புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும்.


***தொடர்பு மின்னஞ்சல் முகவரி:*** *sunvaanavil@gmail.com*

*‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

**வானவில்**

***இணையத்தளம்:*** *http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.*


**சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!**

‘வானவில்’ வாசகர்கள் அனைவருக்கும் தமிழ் – சிங்கள புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**–ஆசிரியர் குழு**

# இயற்கை விவசாயம்தான் இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமா?

**இலங்கையின் பொருளாதார நிலைக்குலைவு உலகம் முழுவதும் பேசப்படுகின்றது. கூடவே முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இயற்கை விவசாயம் பற்றியும் பேசப்படுகிறது. இதற்கான காரணம், இன்று இலங்கையில் உணவுப் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாட்டுக்கு, உணவுப் பொருட்களின் உற்பத்தி வெகுவாகக் குறைந்திருப்பதும் ஒரு காரணம். இதற்கு, 'இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிகொல்லிகளைத் தவிர்ப்பது' என்று முடிவெடுத்து தடையை அமுலாக்கியது ஆகும். பின்னர் இந்தத் தடையை நீக்கினாலும் உற்பத்தி வீழ்ச்சியைத் தவிர்க்க முடியவில்லை. இதன் தொடர்ச்சியாக இயற்கை விவசாயத்துக்கு எதிராக உலகெங்கும் குரல்கள் ஒலிக்க ஆரம்பித்திருக்கின்றன. இந்த எந்த அளவுக்கு உண்மை? இதன் பின்னணி என்ன? 'ரெட் நோர்ட்ஹவுஸ்' (Ted Nordhaus) அளித்த பேட்டி எமக்கு ஒரு சித்திரத்தை அளிக்கிறது. நாம் அவரது கருத்துகளில் முரண்படலாம். ஆனால், விவாதிக்க வேண்டிய ஒன்று இந்தப் பேட்டி.**

**அமெரிக்கரான ரெட் நோர்ட்ஹவுஸ், 'தி பிரேக்த்ரூ இன்ஸ்டிடியூட்' (The Breakthrough Institute) அமைப்பின் இயக்குநர். 1966 ஆம் ஆண்டில் பிறந்த இவர் பல நூல்களை எழுதியிருக்கிறார். 'மைக்கேல் ஷெல்லன்பேர்'கருடன் (Michael Shellenberger) இணைந்து 2003இல் இந்நிறுவனத்தை நிறுவினார்.**

**சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முக்கியம் என்று பேசும் அதேசமயம், 'சுற்றுச்சூழலியலாளர்கள் அச்சுறுத்துகிறபடி உலகம் அவ்வளவு சீக்கிரம் அழிந்தெல்லாம் போய்விடாது!' என்றும் பேசுபவர். இயற்கை வளங்களை நவீனத் தொழில்நுட்பங்கள் உதவியுடன் அளவோடு பயன்படுத்தி வளமாக வாழலாம் என்கிறவர். அணுசக்தியையும் நகரமயமாக்கலையும் இணைத்து வளம் பெற முடியும் என்றும் கூட பேசுபவர். அவருடைய பல கருத்துகளைச் சுற்றுச்சூழலியல் ஆர்வலர்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.**



**Ted Nordhaus**

**இத்தகு சூழலில் சமீபத்தில் வெவ்வேறு இதழ்களுக்கு அவர் அளித்த பேட்டியில், இலங்கைச் சூழலையும் கூடப் பேசியிருக்கிறார். ரெட் நோர்ட்ஹவுஸ் பேசும் பல விஷயங்கள் உலகிலுள்ள பல நாடுகளோடு பொருத்திப் பார்க்கக் கூடியவைதான் என்பதால், அவருடைய பேட்டிகளிலிருந்து தொகுக்கப்பட்ட விஷயங்களை இங்கே நாம் பார்க்கலாம்.**

### பருவநிலை மாற்றத்தை எப்படிப் புரிந்துகொள்வது?

பருவநிலை மாற்றம் தொடர்பான இப்போதைய கொள்கை யதார்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல் கடுமையாக இருப்பதால் அதில் மாற்றம் அவசியம். தூய்மையான ஆற்றலைப் பெற உயர் தொழில்நுட்பங்களில் அதிகம் முதலீடு செய்ய வேண்டும். தொழில்நுட்பங்களில் அதிகம் முதலீடு செய்வதால் சுற்றுச்சூழல் தரம் மேம்படுவதுடன் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் மக்களுடைய வாழ்க்கைத் தரமும் அதிகரிக்கும்.

### இயற்கை விவசாயம் நஷ்டம்தான் தருமா?

அப்படியெல்லாம் சொல்ல முடியாது. இயற்கை விவசாயத்தைப் பற்றிப் பேசும்போது நீங்கள் அடிப்படையாகப் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால், அது ஒரு விசேஷமான விஷயம். பணக்கார நாடுகளில் இயற்கை விவசாய சாகுபடி இலாபகரமானதாக இருக்கலாம் காரணம், தங்களுடைய விளைபொருள்களுக்கு அதிக விலை வைத்து, வாங்க முடிந்த பணக்காரர்களுக்கு அவர்களால் எளிதில் விற்றுவிட முடியும். இதற்காகத் தனிச் சந்தையை உருவாக்கிவிடவும் முடியும். எல்லா இடங்களிலும் அது சாத்தியம் இல்லை.

### ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

இரசாயன உரம், பூச்சிகொல்லிகள் போடாமல் பயிர் சாகுபடி செய்வது என்பது செலவு பிடிக்கும் வேலை. அதோடு விளைச்சலும் கொஞ்சம் குறைவாகவே வரும். 'இயற்கை முறையில் பயிர் சாகுபடி செய்யப்படுகிறது, இரசாயன உரம், பூச்சிகொல்லிகள் போடப்படுவதில்லை, எனவே இதில் நஞ்சு கலப்பதில்லை. ஆகையால் விலை அதிகம்' என்று நீங்கள் கூறி விற்றால் அதற்கேற்ப அதிக விலை கொடுக்க பணக்காரர்களால் மட்டுமே முடியும். இதையே நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் மேற்கொள்ள ஆரம்பித்தால், பெரும் நாசமே உண்டாகும்.

### எப்படிச் சொல்கிறீர்கள்?

இயற்கை விவசாயத்தில் உற்பத்தியாகிற பொருட்களை எல்லோராலும் அதிக விலை கொடுத்து வாங்க முடியாது. விளைச்சல் குறைவாகிவிடும்போது, எல்லோருமே இயற்கை விவசாயம் மூலம்தான் சாகுபடி செய்கிறார்கள் என்பதால் சந்தையில் விலையையும் அதிகப்படுத்தி விற்றுவிட முடியாது. எனவே முதலில் சாகுபடியாளர்களுக்கு நஷ்டம் ஏற்படும். சந்தைக்கு வரும் உணவு தானியங்களின் அளவும் குறையும். இது பிறகு விலையுயர்வுக்கும் பற்றாக்குறைக்கும் வழிவகுக்கும். விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள், மக்களும் பாதிக்கப்படுவார்கள்.

### விவசாயிகள் இதனால் எப்படிப் பாதிப்புக்குள்ளாவார்கள்?

எப்படியென்றால், இந்த விலையுயர்வு சாகுபடியாளர்களுக்குப் பயன் தராது. அப்புறம் இதனால் சுற்றுச்சூழலுமே கெடும்! வழக்கமான உரம் – பூச்சிகொல்லி சாகுபடியைவிட புதிய முறையும் தன் பங்குக்கு சூழலைக் கெடுக்கும். பசுமை இல்ல வாயுக்களின் வெளிப்பாடு, நைதரசன் வாயு வெளியேற்றம், நிலப் பயன்பாடு

காரணமாக சூழல் மேலும் கெடும். சாகுபடி குறைந்தால் ஏற்றுமதியும் குறையும்.

**இலங்கை நிலைமையை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

கொரோனா பெருந்தொற்றால் நாடு மிகவும் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் இயற்கை விவசாய சாகுபடி முறைகளுக்கு மாறுமாறு அனைவரையும் கட்டாயப்படுத்தியது இலங்கையில் பேரழிவுக்கே இட்டுச் சென்றது. கோத்தபய ராஜபட்ச சற்றே நிதானத்துடன் இந்த நடைமுறையைக் கடைப்பிடிக்க உத்தரவிட்டிருந்தால் மிகக் குறுகிய காலத்தில் இந்த அளவுக்குப் பேரழிவு ஏற்பட்டிருக்காது. முழுக்க மாறுவதற்குப் பதிலாக, பெருமளவு இரசாயன உரப் பயன்பாட்டையும் தொடர்ந்து அனுமதித்திருந்தால் சாகுபடி சரிந்திருக்காது. செயற்கை இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தால் – அதை வேகமாகச் செய்தாலும், நிதானமாகச் செய்தாலும் – விளைச்சலும் ஏற்றுமதியும் நிச்சயம் குறையும்.

**சரி, மாறிவரும் சுற்றுச்சூழல் கேடுகளுக்கு மத்தியில் இந்த விஷயங்களை எப்படி அணுகுவது?**

நிதான அணுகுமுறைதான் நமக்குத் தேவை. கச்சா பெட்ரோலிய எண்ணெய், இயற்கை எரிவாயு ஆகியவற்றின் பயன்பாட்டை நம்மால் ஒரேயடியாகக் குறைக்கவோ கைவிடவோ முடியாது. அப்படிச் செய்வதற்கு நிறைய காலம் பிடிக்கும். அவ்வாறு செய்து முடிக்கும்போது ஆற்றலுக்காக நாம் அதிகம் செலவிட வேண்டிய நிலையில்தான் இருப்போம். இப்போது உரங்களின் விலை அதிகரிப்புக்குக் காரணம் இயற்கை எரிவாயுவின் விலை அதிகரித்துவிட்டதுதான். மின்சாரம் தயாரிக்கவும் வாகனங்களை இயக்கவும் பெட்ரோல் – டீசல், இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க முடியும் என்ற நிலையை உருவாக்கினாலும்கூட சீமெந்து, செயற்கை உரம், இரும்பு ஆகியவற்றைத் தயாரிக்க இந்த ஆற்றல் வளங்கள் அவசியம்.

**ஆனால், இரசாயன உரங்கள் கொடியவை என்கிறார்களே?**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜெர்மன் விஞ்ஞானிகள் பிரிட்ஸ் ஹபர் – கார்ல் பொஷ்க் (Fritz Haber- Carl Bosch) ஆகியோர் இணைந்து உருவாக்கிய அதிக அழுத்தம் மூலம் இரசாயன விளைவை ஏற்படுத்தி அமோனியா தயாரிக்கும் நடைமுறையால்தான் இன்று உலகின் சரிபாதி மக்கள் பட்டினி கிடக்காமல் வயிறார உணவு தானியங்களைச் சாப்பிட முடிகிறது. இந்தத் தயாரிப்புச் செலவைக் குறைக்கும் புதிய தொழில்நுட்பத்தை உருவாக்க வேண்டும் அல்லது மண்ணில் நேரடியாக நைதரசனை செறிவூட்ட மரபணு மாற்றப்பட்ட நுண்ணுயிரிகளைப் பயன்படுத்த வழிகாண வேண்டும்.

பருவநிலை மாற்றம் மற்றும் சூழல் கேடு நிச்சயமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை. புவி வெப்பமடைவதைக் குறைப்பதும் அவசியம். ஆனால், இதோ உலகம் அழியும் காலம் வந்துவிட்டது என்று அனைவரையும் பீதியில் ஆழ்த்துவதும், இன்ன திகதிக்குள் பெட்ரோல்-டீசல் பயன்பாட்டைக் கைவிட வேண்டும் என்றெல்லாம் கெடு நிர்ணயிப்பதும் வேண்டாத வேலை. இவற்றுக்குப் பின்னால் அறிவியலைவிட அரசியல்தான் அதிகம் இருக்கிறது. இப்போதே நவீனத் தொழில்நுட்பங்களாலும் மாற்று உற்பத்தி முறைகளாலும் காற்றில் நஞ்சு கலப்பது குறைந்து கொண்டிருக்கிறது. தூய்மையான சூழலும் உருவாகிறது. இப்படிச் சொல்வதற்காக மானிடர்களைக் கொத்து கொத்தாக கொல்ல நினைக்கும் கொலைகாரன் என்று சூழலியலாளர்கள் என்னைச் சாடியுள்ளனர். இது அபத்தம்.

**சரி, சுற்றுச்சூழலை எப்படித்தான் ஆக்கபூர்வமாக அணுகுவது?**

பருவநிலை மாற்றம் அதிகமாகாமல் இருக்க, புவியின் வெப்பத்தைக் குறைக்க உடனே செயல்பட்டாக வேண்டும், காலம் வேகமாகக் கடந்து கொண்டிருக்கிறது என்று உலக நாடுகளுக்கு இடையிலான அரசுகளின் கூட்டறிக்கை எச்சரிக்கிறது. இந்த எச்சரிக்கைகளும் இலக்குகளும் தான்தோன்றித்தனமானவை, அறிவியல் அடிப்படையிலானவை அல்ல. புவி வெப்பம் அதிகமானாலும்கூட மக்களை உயிரோடு வாழ வைப்பதற்கான தொழில்நுட்பம் கிடைத்துவிட்டால் கவலைப்பட ஏதும் இல்லை. புவி வெப்பம் குறைந்து, அதே வேளையில் மக்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகமாகி, நாட்டில் பசி – பட்டினி – பஞ்சம் தலைவிரித்தாடினால் என்ன பயன்? மக்களை வாழவைக்கும் தொழில்நுட்ப முன்னேற்றங்களைக் கண்டுபிடித்துவிட்டால் இந்த எச்சரிக்கைகள் தொடர்பாக அச்சப்படத் தேவையில்லை.

பனிப்போர் காலத்தில் உலக மக்கள் கரிப்புகை வெளிப்பாட்டைக் குறைக்கும் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தினர். இதனால் சூழல் தூய்மை அடைந்தது. இப்போது உக்ரைன் மீது ரஷ்யா நிகழ்த்திவரும் தாக்குதலால் கச்சா பெட்ரோலிய எண்ணெய், இயற்கை எரிவாயுத் தட்டுப்பாட்டை எதிர்நோக்கும் உலகம் இதற்கும் ஒரு மாற்று வழியைக் கண்டுபிடிக்கும். புவி அரசியலும் எரிசக்தித் தேவைகளும்தான் நாடுகளை சிந்திக்க வைக்கின்றன. பருவநிலை மாற்றம் என்ற தலைப்பு பேச்சுக் கச்சேரிக்குத்தான் அதிகம் பயன்படுகிறது. புதுப்பிக்கத்தக்க ஆற்றல்களை அதிகம் பயன்படுத்துவது, புதுப்பிக்க முடியாத புதை படிவ எரிபொருளைத் திட்டமிட்டு சிக்கனமாகப் பயன்படுத்துவது, புவியரசியல் சார்ந்த கொள்கைகளில் கவனமாக இருப்பது ஆகியவற்றின் மூலம்தான் நாடுகள் பருவநிலை மாற்ற பாதிப்புகளைக் குறைக்க முடியும்.

பேட்டியைத் தமிழில் தொகுத்தளித்தவர்:
***டி.வி.பரத்வாஜ்***

## இலங்கையை வந்தடையவுள்ள மருந்துகள்

இந்திய அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட 101 வகையான மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்கள் ஏப்ரல் மாதத்திற்குள் இலங்கைக்கு வரவுள்ளதாக சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன(Channa Jayasumana) கூறியுள்ளார். அத்துடன் இந்தோனேசியாவால் வழங்கப்பட்ட 340மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகளும் விரைவில் வந்தடையுமென அவர் தெிவித்துள்ளார்.

இதேவேளை, 186 அத்தியாவசிய மருந்து வகைகளை இறக்குமதி செய்வதற்கு 19.02 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், சுகாதார அமைச்சின் மத்திய களஞ்சியசாலையில் இரண்டு உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் 148 அத்தியாவசிய மருந்துகள் உட்பட பல மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வரலாற்றுப் பார்வையிலிருந்து சீனாவின் வளர்ச்சி



**ஷாங்காய் நகரம்**

எழுச்சி பெற்று வரும் சீனா, உலகை ஒரு 'புதிய சர்வதேச ஒழுங்கை' நோக்கி மாற்றியுள்ளது. சர்வதேச ஒழுங்கு என்பது அது புதியதாக அல்லது பழையதாக எதுவாக இருந்தாலும், அது குறிப்பது ஒரு நாட்டின் தன்மை மற்றும் கட்டமைப்பு என்பன உலகின் ஏனைய பகுதியின் பொருளாதார, அரசியல், சமூக, கலாச்சார விடயங்களுடன் கொண்டுள்ள உறவைக் குறிக்கும். முன்னைய சர்வதேச ஒழுங்கு *1990* களில் சோசலிச அரசுகளின் வீழ்ச்சியுடன் அதுவும் வீழ்ச்சியடைந்தது.

ஏன் சீனா உருவாகியுள்ள புதிய சர்வதேச ஒழுங்கின் மையமாக மாறியுள்ளது? வேகமான வளர்ச்சியுடன் உலகின் இரண்டாவது பொருளாதாரமாக வளர்ந்துள்ள சீனாவின் செல்வாக்கும் தாக்கமும் உலக ஒழுங்கில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அந்த நாடு சனத்தொகை ரீதியாகவும், புவியியல் ரீதியாகவும் பெரியது. அது ஒரு அணு ஆயுத நாடாக இருப்பதுடன், அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகியவற்றுக்கு அடுத்ததாக விண்கலத்தை வானுக்கு ஏவிய மூன்றாவது நாடாகவும் இருக்கின்றது.

**'ஒரு நூற்றாண்டு இழிவு நிலை'**

வரலாற்று ரீதியாக சீனா உலகில் செல்வாக்கு செலுத்திய, புதுமைகளைக் கண்டு பிடித்த பிரதான நாடாகும். பொருளாதார அறிஞர் போல் பரோனின் (Paul Barron) *1957* கூற்றுப்படி, *1800* இல் உலகில் சீனாவின் கைத்தொழில் உற்பத்தி *33* சத வீதமாகும். அது *1900* இல் *6* வீதமாகவும், *1950* இல் *3* வீதமாகவும் குறைந்துவிட்டது. *1949* இல் மாஓ சேதுங் அவர்கள் கூறியதன்படி, "ஒரு நூற்றாண்டு இழிவான நிலையிலிருந்து சீனா புரட்சியின் மூலம் எழுந்துவிட்டது".

**கலாநிதி சிறிமால் அபயரத்ன**
(Dr.Sirimal Abeyaratne)

*1949* இல் மாஓ சேதுங் அவர்களின் தலைமையின் கீழ் சீன மக்கள் குடியரசு அல்லது கம்யூனிஸ்ட் சீனா உருவானது. அன்றிலிருந்து *1976* இல் அவர் இறக்கும் வரை அவர் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக இருந்து சீனாவை ஆட்சி செய்தார்.

பலர் குறிப்பிடுவது போல, ஒரு காலகட்டத்தில் பின்தங்கிய நிலையிலும் வறுமையிலும் இருந்த இலட்சோப இலட்சம் சீன மக்கள் அதன் பின் கல்வியறிவிலும் சுகாதாரத்துறையிலும் பெரும் முன்னேற்றத்தை அடைந்தனர். *1978* இல் புதிய தலைவர் டெங் சியாவோபிங் (Deng Xiaoping) தலைமையில் நவீன சீர்திருத்தக் கொள்கை ஆரம்பிக்கப்பட்ட பொழுது, 'வறுமையானது சோசலிசமோ அல்லது கம்யூனிசமோ அல்ல' (Pauperism is not Socialism or Communism) என அவர் கூறியதற்கு இதுதான் காரணம். அவர் ஆரம்பித்த கொள்கைச் சீர்திருத்தங்கள் சீனப் பொருளாதாரத்தை சர்வதேச வர்த்தகத்திற்கும் முதலீட்டுக்கும் கதவுகளைத் திறந்துவிட்டு, சீனப் பொருளாதாரத்தை வேகமாக வளர்த்து அதை ஒரு உலக பொருளாதார சக்தியாக மாற்றியுள்ளது. இந்த சீர்திருத்தங்களை பல மார்க்சியவாதிகளும் பிறரும் 'முதலாளித்துவ ஒழுங்கின் மாபெரும் வெற்றி' எனப் பார்க்கின்றனர்.

**மாற்றத்துக்கான தயாரிப்பு**

*2021* பெப்ருவரியில் நாட்டின் கடுமையான வறுமை ஒழிக்கப்பட்டு விட்டதாக சீன அரசாங்கம் அறிவித்தது. அது ஒரு வேகமாக வளரும் வேகமாக மாற்றமடையும் நாடு. ஐ.நா. செயலாளர் நாயகம் அன்ரோனியோ குற்றரெஸ் (Antonio Guterres) ஒருமுறை கூறும் போது,

"ஒவ்வொரு முறையும் நான் அங்கு பயணம் மேற்கொள்ளும் போதும், சீனாவின் முன்னேற்றத்தினதும், மாற்றத்தினதும் வேகம் என்னை பிரமிப்படையச் செய்யும்" எனச் சொல்லியுள்ளார்.

சீனாவின் வெற்றிக்கு சீர்திருத்தங்கள் மட்டும் காரணமல்ல. *1949* புரட்சிக்குப் பின்னர் அடித்தளம் போடப்பட்டு, அதன் மீது *30* வருடங்கள் கழித்து *1978* இல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, பெரும் இடையூறுகள் எதுவுமில்லாமல் சீனா ஒரு பொருளாதார சக்தியாக நிர்மாணிக்கப்பட்டது. இந்தியாவிலும் ஜவகர்லால் நேரு பிரதமராக இருந்த காலத்தில் இவ்வாறானதொரு அடித்தளம் போடப்பட்டு, உலக ஒழுங்கில் அதுவும் ஒரு பொருளாதார செல்வாக்குச் செலுத்தும் சக்தியாக வந்துள்ளது.

சீனாவின் வெற்றிக் கதைக்கு இரண்டாவது காரணம், அது தன்னை பூகோள ரீதியான பொருளாதார சக்தி நிலையமாக (Global Economic Power House) மாற்றியதாகும். இலங்கை *1948* இல் சுதந்திரத்தைப் பெற்ற போதும், அரசாங்கம் மாறும் போது எல்லாமே மாறி ஒரு தொடர்ச்சி இல்லாமல் போய்விட்டது.

**ஒழுக்கமான வேலைச் சக்தி**

சீனாவின் வெற்றிக் கதைக்கு இன்னொரு காரணம், அதனுடைய 'ஒழுக்கமான மக்கள் தொகை' (Disciplined Population) அதனுடைய பொருளாதார வெற்றிக்குக் காரணமாகும். உண்மையில் இது கடந்த காலத்தில் நாட்டில் இருந்த கம்யூனிஸ்ட் ஆட்சியின் விளைவாகும். இருந்த போதிலும், இந்த வெற்றியின் அர்த்தம் எல்லா விடயங்களும் சுமூகமாகவும் உறுதியான முன்னேற்றத்தையும் கொண்டிருந்தது என்ற அர்த்தமல்ல. பல தோல்விகளும் நிகழ்ந்துள்ளன. சில ஆய்வாளர்களின் கருத்துப்படி, மாவோவின் கலாச்சாரப் புரட்சி அழிவுகரமானதுதான். இருந்தாலும், அவர் கலாச்சாரப் புரட்சியை ஆரம்பித்த போது, பல இலட்சக்கணக்கானவர்கள் அதை ஆதரிப்பவர்களாக இருந்தனர்.

சீன அரசாங்கம் நவீன கொள்கைச் சீர்திருத்தங்களை ஆரம்பித்த போது, எமது நாட்டைப் போலல்லாது அங்கு மக்கள் அந்த கொள்கையுடன் ஒன்றித்து நின்றார்கள். சமீபத்தைய உதாரணங்களில் ஒன்று, சீன அரசாங்கம் கொவிட் – *19* பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இருந்தது. சீனாவில் உருவான இந்த வைரஸ்சின் ஆபத்து குறித்து முன் அனுபவம் இல்லாதிருந்த போதும், மக்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்ததாலும், அரசாங்கத்தின் நெறிமுறைகளைப் பின்பற்றி நடந்ததாலும், சீனாவால் அதைக் கட்டுப்படுத்த முடிந்தது.

சீனாவின் வெற்றிக் கதையின் நான்காவது விடயம், கொள்கை வகுப்பில் அதன் நடைமுறை தழுவிய செயற்பாடாகும். *1978* கொள்கைச் சீர்திருத்தங்களின் பின்னர் சீனா புத்தகவாத ரீதியாகவும், தத்துவ ரீதியிலான நிலைகளிலிருந்தும் கொள்கை முடிவுகளை எடுப்பதை நிறுத்தி, உள்நாட்டு ரீதியிலும், உலக அளவிலும் நிலவும் நிலைமைகளைக் கணக்கில் எடுத்து, நடைமுறை ரீதியான அணுகுமுறையில் முழுத் திட்டத்துக்குமான கொள்கை வகுப்பைச் செய்தமையாகும்.

**பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள போட்டா போட்டி**

சீனா எப்பொழுது ஒரு உலக பொருளாதார சக்தியாகவும், குறிப்பிடக் கூடியளவு இராணுவ சக்தியாகவும் வளர்ந்ததோ, பாரம்பரியமாக ஆதிக்கம் செலுத்திய ஆதிக்க சக்திகள் வீழ்ச்சி அடையத் தொடங்கின. ஒரு எடுத்துக்காட்டாக, *1950* இல் உலக அளவில் 50 வீதமான உற்பத்தியைக் கொண்டிருந்த அமெரிக்கா, இப்பொழுது 20 வீதமளவுக்கு வீழ்ச்சி அடைந்துள்ளது. அதன் காரணமாக உலக அளவில் பூகோள அரசியல் போட்டி உருவாகி, எமது இந்து சமுத்திரப் பிராந்தியமும் அந்தப் புள்ளிகளில் ஒன்றாக மாறியுள்ளது. அதற்கு அண்மைக்கால உதாரணங்களாக, அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகியவற்றுக்கு இடையே ஏற்பட்டுள்ள அணுசக்தி ஒப்பந்தத்தையும், அமெரிக்கா, யப்பான், ஆஸ்திரேலியா, இந்தியா என்பனவற்றுக்கு இடையே ஏற்பட்டுள்ள பாதுகாப்பு உரையாடல் ஒழுங்கையும் (Defence Dialogue Arrangement) குறிப்பிடலாம்.

இந்த அதிகாரப் போட்டியின் மத்தியில் இலங்கை சிக்கி நாட்டிற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லத் தேவையில்லை. இலங்கை எந்தவொரு பக்கமும் சாயாமல் தனது பாரம்பரியமான அணிசேரா மற்றும் நடுநிலைக் கொள்கையினூடாக உலகத் தொடர்புகளைப் பேண வேண்டும். இல்லாவிடின், சில நாடுகளுக்கு நிகழ்ந்தது போல நெருக்கடிகளுக்குள் சிக்க வேண்டி ஏற்படும்.

(இந்தக் கட்டுரையாளர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறைப் பேராசிரியராவர். அவரது இந்தக் கட்டுரை இலங்கை அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் மொகான் சமரநாயக்கவுடன் (Mohan Samaranayake) நடத்திய "எழுச்சி பெறும் சீனாவும் இலங்கைக்கு அதன் பாடங்களும்" என்ற தலைப்பிலான நேர்காணலை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டுள்ளது. இவ்வகையான நேர்காணல்களை 'வீமான்ச முன்னெடுப்பு' (Veemansa Initiative) என்ற சுயாதீனமான சிந்தனைக் குழாம் பொருளாதாரம், அரசியல், சமூகம் சார்ந்து பல புத்திஜீவிகளிடமும் வல்லுனர்களிடமும் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றது)

# உக்ரைன் – ரஷ்ய போர் காரணமாக உலகில் ஐந்தில் ஒருவர் வறுமைக்கு தள்ளப்படலாம்

ஐ.நா. பொதுச் செயலாளர் அந்தோனியோ குத்ரேஸ் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளித்தார். அந்தப் பேட்டியில் அவர், "உக்ரைனில் நடக்கும் துயரங்களை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உக்ரைன் எல்லைகளைத் தாண்டியும் இந்தப் போர், ஏனைய நாடுகள் மீது சத்தமில்லாமல் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தத் தாக்குதலில் உலகின் ஐந்தில் ஒருவர், அதாவது 1.7 பில்லியன் மக்கள் வறுமை, பசி, பட்டினி போன்ற சூழலுக்குத் தள்ளப்படுவார்கள். இது அண்மையில் ஏற்படாத ஒரு சூழல். உக்ரைன் மற்றும் ரஷ்யாவும் உலகில் கோதுமை உற்பத்தியில் 30% பங்கு கொண்டுள்ளது. அதேபோல் பார்லியும் உக்ரைன், ரஷ்யாவில் தான் அதிகமாக உற்பத்தியாகிறது. மக்காச்சோள உற்பத்தியில் உக்ரைன் உலகளவில் 5வது இடத்தில் உள்ளது. சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தியில் பாதிக்கும் மேல் உக்ரைனில் தான் உருவாகிறது. வளர்ச்சி குன்றிய நாடுகளில் 45 நாடுகள் ரஷ்யா, உக்ரைன் கோதுமையையே நம்பியுள்ளன" என்று அவர் தெரிவித்துள்ளார்.

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# அமெரிக்காவின் மனித உரிமைகள் பற்றிய அறிக்கை மற்றைய நாடுகளைப் பயமுறுத்தும் ‘ஒரு விலைப்பட்டியல்’!




ஏப்ரல் 12ந் திகதி செவ்வாய்க்கிழமை, அமெரிக்காவின் புறூக்லின் புகையிரத நிலையத்தில் ஒரு மனிதன் 33 தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் குறைந்தது 33 பேர் காயமடைந்திருக்கின்றனர். அதற்கு சில நாட்களுக்கு முன்னர் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 6 பேர் இறந்ததுடன், 12 பேர் காயமடைந்தனர். அமெரிக்காவில் துப்பாக்கி வன்செயல் வருடாவருடம் அதிகரித்து சாதனை படைத்து வருகிறது.

இந்த துப்பாக்கிச் சூடுகள் நடந்துள்ள சூழலில்தான் அமெரிக்கா உலகின் 198 நாடுகளின் 2021 ஆம் ஆணடுக்கான மனித உரிமை நிலவரங்கள் பற்றிய அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. ஆனால் அந்த நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா தன்னை உள்ளடக்கவில்லை. மற்றைய நாடுகளின் மனித உரிமை நிலவரங்கள் குறித்து பொறுப்பற்ற அறிக்கைகள் வெளியிடும் வாசிங்டனில் உள்ள மேட்டுக்குடி அரசியல்வாதிகளுக்கு புறூக்லின் புகையிரத நிலையத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இரத்தம் சிந்தியவர்களின் அழுகுரல் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அமெரிக்கா நூற்றுக்கணக்கான பக்கங்களில் மற்றைய நாடுகளின் மனித உரிமை நிலவரஙகள் குறித்து வெளியிடும் அறிக்கைகளில் மனித உரிமைகள் பற்றி தனது ‘அக்கறையை’ அடிக்கடி குறிப்பிடுகிறது. ஆனால் தனது சொந்த நாட்டில் குற்றவியல் நடவடிக்கைகள், பொலிஸ் தாக்குதல்கள், கொரோனா நோய்த் தாக்கம் என்பனவற்றால் இறந்தவர்கள், காயமடைந்தவர்கள் குறித்து எதனையும் குறிப்பிடுவதில்லை.

அமெரிக்காவின் “துப்பாக்கி வன்செயல் ஆவணக் காப்பக” இணையத்தளம் ஏப்ரல் 12 இல் தெரிவித்துள்ள தகவலின்படி, அமெரிக்காவில் இந்த வருடம் மட்டும் துப்பாக்கிச் சூடுகளினால் 11,896 பேர் இறந்தும், 9,486 பேர் காயமடைந்தும் உள்ளனர். அதாவது, தினமும் சராசரியாக 116 பேர் வீதிகளில் நடக்கும் துப்பாக்கிச் சூடுகளினால் இறந்துள்ளனர். இது மற்றைய நாடுகளில் நடைபெறாத மனித உரிமைகள் பேரழிவாக இருப்பதுடன், அமெரிக்காவை ஒரு “நாகரீகமடைந்த நாடு” என்றோ, அதை “மனித உரிமைகளின் பாதுகாவலன்” என்றோ, நினைத்துப் பார்க்க முடியாதபடி செய்கின்றது. அமெரிக்கா உலகிலேயே மிக முன்னேறிய வைத்திய வசதிகள் கொண்ட நாடாக இருக்கின்ற போதிலும், உலகிலேயே அமெரிக்காவில்தான் கொரோனா நோயால் ஆகக் கூடுதலான மக்கள் இறந்துள்ளனர்.

இது பற்றி சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சாவோ லீஜியான் (Zhao Lijian) குறிப்பிடுகையில், “அமெரிக்கா தனது நாட்டைப் பொறுத்தவரை மனித உரிமைப் பாதுகாப்பை என்றுமே நிறைவேற்றியது கிடையாது. அது ஒரு வெற்று வாக்குறுதி மட்டுமே. ஆனால் வெளியுலகில் அமெரிக்கா தனது மேலாதிக்க நிகழ்ச்சி நிரலை மறைப்பதற்கான கேடயமாக மனித உரிமைகளைப் பயன்படுத்துகிறது. அமெரிக்கா இறுதியாக வெளியிட்டுள்ள மனித உரிமை நிலவரம் பற்றிய அறிக்கையில் சீனா பற்றி 90 பக்கங்களில் குறிப்பிட்டிருப்பது ஆச்சரியமான விடயமல்ல. அதே நேரத்தில் சீனாவின் தாய்வான் தீவு பற்றி தனியான அறிக்கை வெளியிட்டு ஒரு சீனக் கொள்கைக்கு எதிராக உள் நோக்கத்துடன் மனித உரிமைகள் விடயத்தைப் பயன்படுத்தியுள்ளது. வருடா வருடம் அமெரிக்கா “மனித உரிமைகள் அறிக்கைகளை” வெளியிட்டு அதன் மூலம் சீனாவை வசைபாடி வருகிறது. இதனால் அவர்கள் என்ன பயனை அடைந்தார்கள் எனத் தெரியவில்லை. ஆனாலும் 40 வருடங்களாக இந்த மனித உரிமை அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர். அமெரிக்காவின் மனித உரிமைகள் பற்றிய அறிக்கைகளில் “நட்பில்லாத நாடுகள;” பற்றியே கடுமையான குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டிருக்கின்ற அதே நேரத்தில் தமது “நட்பு நாடுகள்” குறித்து எதுவும் குறிப்பிடப்பட்டிருக்காது” என்றார்.

அமெரிக்கா தனது மேலாதிக்க பூகோள அரசியலுக்கு ஒத்துழைத்து, அடிபணிந்து வேலை செய்வதை வைத்தே “மனித உரிமைகள்”, “ஜனநாயகம்” போன்ற விடயஙகளில் உலக நாடுகள் பற்றிய தனது கண்ணோட்டத்தைத் தீர்மானிப்பது வழமை.

ஒவ்வொரு வருடமும் “மனித உரிமைகள் அறிக்கை”யை வெளியிடுவதற்கு அமெரிக்க இராஜாங்க திணைக்களம் பெரும் பிரயத்தனம் எடுக்கின்றது. இதற்கான அடிப்படைக் காரணம் இந்த அறிக்கையை மற்றைய நாடுகளை மிரட்டுவதற்கான ஒரு “விலைப் பட்டியலாக” உபயோகிப்பதால்தான்.

இந்த விடயம் சம்பந்தமாக இலண்டன் பல்கலைக்கழகப் பேராசிரியர் கொஸ்ராஸ் டவ்ஸினாஸ் (Costas Douzinas) எழுதிய “மனித உரிமைகளும் சக்கரவர்த்தியும்”

(Human Rights and Empire) என்ற தனது நூலில், "வர்த்தகம், உதவி, இராஜதந்திர உறவுகள் என்பனவற்றுக்கு மனித உரிமைகள் ஒரு கருவியாகப் பயன்படுகிறது" எனக் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்கா தன்னை சர்வதேச சமூகத்தின் பேச்சாளனாக அடிக்கடி காண்பிக்கின்ற போதிலும், மனித உரிமைகள் சம்பந்தமான ஐ.நாவின் சர்வதேசப் பிரகடனத்தை அது ஒருபோதும் மதித்து நடப்பதில்லை. மனித உரிமைகள் விடயத்தை அமெரிக்கா தனது மேலாதிக்க அரசியல் நலன்களைப் பாதுகாப்பதற்கே பயன்படுத்துகிறது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் உலகில் ஏராளமான போர்களை நடத்தி பெரும் மனிதப் பேரழிவுகளைக் கொண்டு வந்து, மனித உரிமைகளைக் காலில் போட்டு மிதித்த அமெரிக்கா எவ்வாறு "மனித உரிமைகளைப் பாதுகாக்கும்" நாடு என்று தன்னைக் கூற முடியும்?

குறிப்பாக, இந்த வருடம் உலகிலுள்ள பல நாடுகளுக்கும் பிரதேசங்களுக்கும் நெருக்கடியான ஆண்டாகும். கோவிட் – 19 பெரும் தொற்று மூன்றாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது. குறிப்பிடத்தக்க மூன்றாம் உலக நாடுகள் தடுப்பூசி மற்றும் உணவு பற்றாக்குறை என்ற இரட்டைத் தட்டுப்பாட்டை எதிர்நோக்குகின்றன. மத்திய கிழக்கிலும் ஐரோப்பாவிலும் யுத்தத்தால் ஏற்பட்ட வடுக்களிலிருந்து இன்னமும் இரத்தம் வழிந்தோடிக் கொண்டிருக்கிறது.

வாழ்வா சாவா என்ற நெருக்கடியான ஒரு சூழலில் அமெரிக்கா மற்றைய எல்லா நாடுகளினதும் நலன்களைப் புறக்கணித்துவிட்டு, தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக "மனித உரிமைகள;" என்ற பெயரில் கீழ்த்தரமான தந்திரங்களைக் கையாண்டு, தலையீடுகள், தடைகள் என்பனவற்றின் மூலம் இலாபம் ஈட்ட முயற்சிக்கிறது. அமெரிக்காவின் "மனித உரிமைகள் அறிக்கை" என்பது உலக சரித்திரத்தின் கறை படிந்த பக்கமாகும்.

('குளோபல் ரைம்ஸ்' பத்திரிகை ஆசிரியர் தலையங்கத்தின் சாராம்சமே மேலே தரப்பட்டுள்ளது)

# பொருளாதார நெருக்கடி நிலைக்கு விரைவில் தீர்வு

*- நிதியமைச்சர் அலிசப்ரி*

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைக்கு தீர்வு காணும் வகையில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலாம் கட்ட பேச்சுவார்த்தை மிகவும் வெற்றிகரமாக நடந்துள்ளதாக நிதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார். நாட்டின் தற்போதைய சூழ்நிலை தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா (Kristalina Georgieva) உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள முடிந்துள்ளதாகவும் நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவர்கள் மத்தியில் சிறந்த புரிதல் காணப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரிலிருந்து காணொலி மூலம் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேற்படி ஊடக மாநாட்டில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அலி சப்ரி,

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் பல மட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளதாக தெரிவித்துள்ள அவர், சர்வதேச நாணய நிதியத்தின் நான்காவது சரத்துக்கு இணங்க குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரையின்படி இலங்கைக்கு கடன் வழங்கக் கூடிய வாய்ப்புகள் கிடையாதென ஏற்கனவே தீர்மானித்திருந்தபோதும், அது தொடர்பில் தீர்க்கமான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு பின்னர் கடன் வழங்குவதற்கான வாய்ப்பு மற்றும் புதிதாக பெற்றுக்கொள்ளக்கூடிய கடனை மீளச் செலுத்துவதற்காக முறைமை தொடர்பில் சாத்தியமான இணக்கப்பாட்டுக்கு வரமுடிந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.



அலி சப்ரி

அத்தகைய சூழ்நிலையில் கடன் பெற்றுக் கொண்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர், ஏப்ரல் மாதத்தில் 500மில்லியன் டொலரும் ஜூன் மாதத்தில் மேலும் 500மில்லியன் டொலரும் மற்றும் ஜூலை மாதத்தில் ஒரு பில்லியன் டொலர்களையும் மீளச்செலுத்த வேண்டியுள்ளதாகவும், தற்போது நிலவும் சூழ்நிலையில் மேற்படி கடன் தவணைகளை தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட போதும், அது வெற்றியளிக்கவில்லை எனவும், தவிர்க்க முடியாது அக்கடன்களை செலுத்த வேண்டிய நிலைமை காணப்படுவதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் உதவியை பெற்றுக் கொள்வதற்கு பிணையாளர்கள் தேவைப்படுவதாக மேற்கொள்ளப்பட்டு வரும் பிரசாரங்கள் உண்மைக்குப் புறம்பானதென்றும் அதனை தாம் நிராகரிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு தற்போதைய நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நிறுவனங்கள் முனைப்பாக செயல்பட்டு வருவதுடன் இலங்கையில் காலை வாரி விடுவது மற்றும் அரசியல் ரீதியில் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் நாட்டை மேலும் மோசமான நிலைக்கே கொண்டு செல்லும் என்பதையும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், ஒருவர் மீது மட்டும் விரல் நீட்டுவது முறையற்றது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தினுடான பேச்சுவார்த்தை வெற்றியடையும் பட்சத்தில் இலங்கைக்கு 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# மத்திய கிழக்கு மற்றும் வளைகுடா நாடுகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள்!



சிரியாவில் (Syria) 2011 இல் உள்நாட்டுப் போர் ஆரம்பமான பின்னர் முதல் தடவையாக அந்த நாட்டின் ஜனாதிபதி பஸார் அல் – ஆஸாத் (Bashar al – Assad) மார்ச் 25 ஆம் திகதி வளைகுடா நாடுகளில் ஒன்றான ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு (UAE) விஜயம் செய்துள்ளார். இதற்கு முதல் அவர் யுத்தம் ஆரம்பமான பின்னர் ஈரானுக்கும் ரஸ்யாவுக்கும் மட்டுமே விஜயம் செய்திருந்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத் தலைநகர் அபுதாபியில் முடிக்குரிய இளவரசர் ஸேக் மொகமட் பின் ஸயாத் அல் – நஹ்யானைச் (Sheikh Mohammed bin al – Nahyan) சந்தித்த ஆஸாத், அவருடன் இரு தரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இந்தப் பேச்சுவார்த்தை அவர்களுக்கிடையிலான புதிய உறவின் ஆரம்பமாகப் பார்க்கப்படுகிறது. அது மட்டுமின்றி, ஈராக்கிலும் லிபியாவிலும் செய்தது போல, சிரியாவிலும் ஆஸாத்தின் ஆட்சியைக் கவிழ்த்து தமக்குச் சார்பான ஆட்சியொன்றை நிறுவுவதற்காக அமெரிக்க – ஐரோப்பிய யூனியன் – நேட்டோ என்பன கூட்டாக மேற்கொண்ட இராணுவத் தாக்குதலின் போதும் எமிரேட்ஸ் அமெரிக்காவை ஆதரிக்காமல் ஒதுங்கியே நின்று கொண்டது குறிப்பிடத்தக்க ஒரு விடயம்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது கருத்து வெளியிட்ட ஐக்கிய அரபு இராச்சிய இளவரசர், அரபுலக பாதுகாப்பைப் பொறுத்தவரை சிரியா ஒரு அடிப்படையான தூண் எனக் குறிப்பிட்டதுடன், அதனுடன் கூட்டுறவைப் பலப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். அவருடைய இந்தக் கருத்து முன்னர் அவர் அமெரிக்காவுக்கு அளித்து வந்த ஆதரவுக்கு நேர் முரணானதாகும்.

அத்துடன் ஆஸாத் டுபாய் ஆட்சியாளர் ஸேக் மொகமெட் பின் ரஸீட் அல் – மக்ரூமையும் சந்தித்து பொருளாதாரம், முதலீடு மற்றும் வர்த்தகத் துறைகளில் இருதரப்பு உறவை வளர்ப்பது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

**சங்கரன்**

சிரியாவைப் பொறுத்தவரை சர்வதேச அரங்கில் ஐக்கிய அரபு இராச்சியம் அதன் முக்கியமான வர்த்தகக் கூட்டாளியாக இருக்கின்றது. 2021 இன் முதல் அரையாண்டில் இரு நாடுகளுக்குமிடையில் 272 மில்லியன் டொலர் பெறுமதியான எண்ணெய் அல்லாத பொருட்களின் வர்த்தகம் நடைபெற்றிருக்கிறது. அது மட்டுமின்றி, சிரிய தலைநகர் டமஸ்கஸ் அருகே 300 மெகாவற்ஸ் திறன் கொண்ட சூரிய ஒளி மின்நிலையம் ஒன்றை அமைப்பதற்கும் எமிரேட்ஸ் நிறுவனங்கள் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளன.

2018 இல் ஐக்கிய அரபு இராச்சியம் தனது தூதராலயத்தை சிரியாவில் மீண்டும் திறந்தது. அதன் பின்னர் எமிரேட்ஸ்சின் வெளிவிவகார அமைச்சர் கடந்த நொவம்பரில் சிரியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

ஆஸாத்தின் இந்த எமிரேட்ஸ் விஜயத்தின் போது இரு தரப்பினரும் சிரியாவின் பிராந்திய ஒருமைப்பாடு குறித்தும் விவாதித்ததுடன், அங்கு நிலை கொண்டிருக்கும் அமெரிக்க, துருக்கியப் படைகளை அகற்றுவது குறித்தும் ஆராய்ந்துள்ளனர். சிரியாவில் யுத்தம் காரணமாக அழிந்து போயுள்ள கட்டமைப்புகளை மீளவும் சீரமைக்க பல பத்தாயிரம் பில்லியன் டொலர்கள் தேவைப்படும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இவற்றை மீளமைப்பதற்கு எமிரேட்ஸ் தனது பொறியியலாளர்களையும், கட்டுமான நிறுவனங்களையும் கொடுத்து உதவியிருக்கிறது.

ஆஸாத்தின் ஐக்கிய அரபு இராச்சிய விஜயம் அமெரிக்காவுக்கு பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. ஏனெனில், இதுவரை காலமும் வளைகுடா நாடுகள் அமெரிக்காவின் 'பொம்மைகள்' ஆகவே கருதப்பட்டு வந்தன. இப்பொழுது அந்தப் பொம்மைகள் தமது சுயமான குரலில் பேச ஆரம்பித்திருப்பது அமெரிக்காவுக்கு கசப்பாக இருக்கிறது.

இன்னொரு புறத்தில் மத்திய கிழக்கில் அமெரிக்காவின் பாரம்பரிய நட்பு நாடாகத் திகழும் சவூதி அரேபியாவின் அண்மைக்காலப் போக்கும் அமெரிக்காவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. அதற்குக்காரணம் சவூதியின் முடிக்குரிய இளவரசர் மொகமெட் பின் சல்மான் ரஸ்யாவுடனும் சீனாவுடனும் நெருக்கமான உறவுகளைப் பலப்படுத்தி வருவதுதான். அவரது பார்வையில் ரஸ்யாதான் எதிர்கால ஆயுத விநியோகஸ்தராக இருக்கும் எனக் கருதுகிறார். அத்துடன் தமது பகைமை நாடான ஈரான் மீது அழுத்தம் கொடுக்கக்கூடிய வல்லமையும் ரஸ்யாவுக்குத்தான் உண்டு என்பது அவரது கருத்து. கடந்த ஆண்டு ஒகஸ்ட்டில் ரஸ்ய தலைநகர் மொஸ்கோவில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சியின் போது சவூதி அரேபியா ரஸ்யாவின் பாதுகாப்பு அமைச்சருடன் ஒரு இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தத்தைச் செய்துள்ளது.

அத்துடன், சவூதி அரேபியா சீனாவுடன் நெருங்கிய உறவு வைப்பதை

விரும்புவதுடன், இந்த வருடம் சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் அவர்களை சவூதிக்கு விஜயம் செய்யுமாறும் அழைப்பு விடுத்துள்ளது. அமெரிக்க 'வோல் ஸ்றீட் ஜேர்னல்' பத்திரிகை வெளியிட்டுள்ள ஒரு தகவலின்படி, சவூதி தனது மசகு எண்ணெயின் ஒரு பகுதியை சீனாவின் யுவான் நாணயத்துக்கு விற்பதற்குப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது. அது மட்டுமின்றி, சவூதி தனது நாட்டில் கூட்டு முறையில் ஆயுதங்கள் தயாரிப்பதற்கு சீனாவுடனும் வேறு சில நாடுகளுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளது.

மார்ச் 02 ஆம் திகதி கூடிய எண்ணெய் உற்பத்தி ஏற்றுமதி நாடுகள் சபையின் (OPEC) அமைச்சர்கள் மட்டக் கூட்டத்தில், உக்ரேன் நெருக்கடியிலிருந்து விலகி இருப்பதெனவும், ரஸ்யா உட்பட அனைத்து நாடுகளுடனும் தற்போது பின்பற்றப்படும் கொள்கையைத் தொடர்வதெனவும் முடிவு செய்திருக்கிறார்கள். அத்துடன் எண்ணெய் உற்பத்தியைப் படிப்படியாக அதிகரித்து எண்ணெய் சந்தைகளை சம நிலையாகவும், ஸ்திரமாகவும் வைத்திருப்பது எனவும் தீர்மானித்துள்ளனர். இந்தத் தீர்மானம் அமெரிக்காவை கோபமடைய வைத்துள்ளது. ரஸ்ய எண்ணெய் மீது தடைகள் விதிக்கப்பட்டுள்ளதால் கூடுதலான எண்ணெயை உற்பத்தி செய்யும்படி அமெரிக்கா சவூதி அரேபியாவை நிர்ப்பந்தித்து வருகிறது. அமெரிக்காவின் நிர்ப்பந்தத்துக்கு வளைந்து கொடுக்காத சவூதி, அமெரிக்க டொலருக்குப் பதிலாக சீனாவுக்கு அதன் யுவான் நாணயத்தில் எண்ணெய் வழங்கப் போவதாக மிரட்டியிருக்கிறது.

சவூதியும் ஐக்கிய அரபு இராச்சியமும் அதிக எண்ணெயை உற்பத்தி செய்து, அதை மலிவு விலையில் வழங்கக்கூடிய நிலையில் இருந்தும், ரஸ்யாவுடனான விநியோக உடன்படிக்கையைப் பாதுகாப்பதில் உறுதியாக இருக்கின்றன. இரண்டு நாடுகளும் அண்மையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் தொலைபேசி அழைப்புகளுக்குப் பதிலளிக்காமல் நிராகரித்திருக்கின்றன.

சவூதி இளவரசருக்கும் ஜனாதிபதி பைடனுக்கும் இடையிலான சுமூகமற்ற உறவு தனிப்பட்ட ரீதியிலானதும், பாதுகாப்பு அடிப்படையிலானதுமாகும். 2019 இல் சவூதியின் 'அரம்கோ' எண்ணெய் நிலையம் ஈரானால் தாக்கப்பட்ட பொழுது அமெரிக்கா தகுந்த எதிர்வினையாற்றவில்லை என்பது சவூதியின் மனக் குறையாகும். அத்துடன், அமெரிக்கா மத்திய கிழக்கில் தனது இராணுவ பிரசன்னத்தைக் குறைத்து வருவதும், ஏமனில் (Yemen) சவூதி நடத்தி வரும் இராணுவத் தாக்குதலை நிறுத்தும்படி அமெரிக்கா கோருவதும், ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா படைகளை விலக்கியதும் சவூதிக்கு அமெரிக்கா மீது அதிருப்தி ஏற்பட்டதற்கான வேறு சில காரணங்களாகும்.

அதே நேரத்தில், ஈரான் பற்றிய தங்களது நிலைப்பாட்டை சவூதியும் ஐக்கிய அரபு இராச்சியமும் பூரணமாக ஆதரிக்கவில்லை என்பது அமெரிக்காவுக்கு இந்த இரு நாடுகள் மீதும் கோபமேற்படக் காரணமாக அமைந்துள்ளது. மறுபுறம், 2019 இல் ஈரான் சவூதியின் எண்ணெய் நிலையங்களைத் தாக்கி, அதன் காரணமாக சவூதியின் எண்ணெய் உற்பத்தி சரி பாதியாகக் குறைந்த நிலை ஏற்பட்ட பொழுது, அமெரிக்கா சவூதியைப் பாதுகாக்கத் தவறிவிட்டது என்பதும் சவூதியின் குற்றச்சாட்டாகும்.

ஜனாதிபதி பைடன் சவூதி இளவரசருடன் தொடர்பு வைப்பதைத் தவிர்த்து, மன்னர் சல்மானுடனேயே தொடர்புகளை வைத்து வருகிறார். அத்துடன், பத்திரிகையாளர் ஜமால் கஸோக்கியை 2018 இல் கொலை செய்ததில் சவூதி இளவரசருக்கு நேரடித் தொடர்பு இருப்பதாகக் கருதும் சீ.ஐ.ஏ.வின் அறிக்கையை வெளியிடுமாறும் பைடன் உத்தரவிட்டிருக்கிறார். அத்துடன், இரு நாடுகளுக்குமிடையில் உறவுகள் கசப்படைவதற்கு சவூதி அரேபியாவில் சமூகப் பெறுமானங்கள் பேணப்படுவதில்லை என அமெரிக்கா குற்றம் சாட்டி வருவதும் ஒரு காரணமாகும்.

அண்மையில் உக்ரேனில் ரஸ்யா படையெடுத்ததைக் கண்டித்து அமெரிக்காவும் அல்பேனியாவும் கூட்டாக ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது, ஐக்கிய அரபு இராச்சியம் அதில் வாக்களிக்காது தவிர்த்துக் கொண்டது. இலண்டனுக்குப் பதிலாக ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலைநகர் அபுதாபியை ரஸ்யப் பணத்தின் சர்வதேச நிலையமாகக் கருதி ரஸ்யாவின் பணக்காரர்களும், வர்த்தகர்களும், இளைஞர்களும் இப்பொழுது செயல்படத் தொடங்கியிருக்கிறார்கள்.

ஒரு தசாப்தத்தின் பின்னர் பஹ்ரைன் சிரியாவுக்கான தனது முதலாவது தூதுவரை நியமித்திருக்கிறது. ஜோர்டான் சிரியாவுடனான தனது வர்த்தகத்தைப் பெருக்குவதற்காக தனது எல்லையைப் பூரணமாக திறந்து விட்டிருக்கிறது. இந்த நடவடிக்கைகள் எல்லாம் மத்திய கிழக்கிலுள்ள பல அரபு நாடுகள் சிரியாவுடனான தமது உறவுகளைப் பலப்படுத்தி வருவதைக் காட்டுகிறது.


மத்திய கிழக்கில் அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடாகக் கருதப்படும் ஜோர்டானின் மன்னர் அப்துல்லா கடந்த வருடம் சிரிய அதிபர் ஆஸாத்துடன் தொலைபேசியில் உரையாடியதுடன், அந்த நாட்டுடன் வர்த்தகத்தை அதிகரிப்பதற்காக சிரியா மீதான அமெரிக்கப் பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டும் எனவும் அமெரிக்காவைக் கேட்டுக் கொண்டார். அராபிய எண்ணெய் குழாய் அமைப்பை மீளமைப்பது சம்பந்தமாகவும், சிரியாவின் ஊடாக லெபனானுக்கு மின்சாரம் வழங்குவது சம்பந்தமாகவும் இரு நாடுகளுக்குமிடையில் உயர்மட்டப் பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன.

சிரிய – அரபுலக உறவுகள் பெரும்பாலும் சவூதி அரேபியாவிலேயே தங்கி உள்ளது. கடந்த நொவம்பரில் சவூதி மற்றும் சிரிய புலனாய்வுத் தலைவர்கள் எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் சந்திப்பு ஒன்றை நடத்தினர். அதற்கு முன்னர் கடந்த மே மாதத்தில் இந்த வகையான முதலாவது கூட்டம் ஒன்று சவூதிக்கும் சிரியாவுக்கும் இடையில் சிரிய தலைநகர் டமாஸ்கஸ்சில் நடைபெற்றது. அதே நேரத்தில் கடந்த ஒரு தசாப்த காலத்தில் முதல் தடவையாக சிரிய சுற்றுலாத்துறை அமைச்சர் அத்துறை சம்பந்தமாக சவூதி ஒழுங்கு செய்த ஒரு மாநாட்டில் பங்குபற்றுவதற்காக றியாத் நகருக்கு விஜயம் மேற்கொண்டார். 2024 இல் அரபு சக்திவளம் சம்பந்தமான ஒரு மாநாட்டை சிரியா தனது தலைநகரான டமாஸ்கஸ்சில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது. சிரியா மீது அமெரிக்கா ஏற்படுத்திய தனிமைப்படுத்தலிலிருந்து படிப்படியாக மீண்டு வருவதை இது எடுத்துக் காட்டுகிறது.

அல்கைடா மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ் (ISIS) போன்ற பயங்கரவாத

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**

# பாகிஸ்தான் ‘சர்வாதிகாரமும்’ இலங்கை ‘ஜனநாயகமும்’




**தெ**ன்னாசிய நாடுகளில் ஒன்றான பாகிஸ்தானில் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின் மூலம் பிரதமராக இருந்த இம்ரான் கானின் அரசு கவிழ்க்கப்பட்டுள்ளது. எதிரணியைச் சேர்ந்த ஒருவர் புதிய பிரதமராகப் பொறுப்பேற்றுள்ளார்.

இன்னொரு தென் ஆசிய நாடான இலங்கையில் 69 இலட்சம் மக்களின் வாக்குகளினால் ஜனாதிபதியான கோத்தபாய ராஜபக்சவையும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வென்று ஆட்சி அமைத்த அவர் தலைமையிலான அரசையும் பதவி விலகக் கோரி வன்முறை ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன.

மறுபுறத்தில், இன்னொரு தென் ஆசிய நாடான நேபாளத்திலும் அரசைப் பதவி விலகக் கோரி போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாலைதீவு என்ற தென் ஆசிய நாட்டில் ஏற்கெனவே தேர்தல் மூலம் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் சார்பான ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டுவிட்டது.

தென் ஆசிய நாடுகளில் மிகுதியாக இருப்பவை இந்தியாவும் பங்களாதேசும் மட்டுமே. அதிலும் இந்தியாவிலும் இலங்கை நிலைமை வரலாம் என ஏற்கெனவே அரசுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதற்கு கட்டியம் கூறுவது போல, அமெரிக்க இராஜாங்க செயலாளர் பிளிங்டன் அண்மையில் இந்தியாவில் மனித உரிமைகள் மோசமடைந்து வருவதாக வெளிப்படையாகப் பேசியிருக்கிறார்.

*பிரதீபன்*

இவற்றில் பாகிஸ்தான், இலங்கை, நேபாளம் ஆகிய மூன்று நாடுகளையும் பொறுத்தவரை ஒரு முக்கியமான விடயம் கவனத்துக்குரியது. இந்த மூன்று நாடுகளும் அமெரிக்காவுக்கும் அதன் மேற்கத்தையக் கூட்டாளிகளுக்கும் பிடிக்காத நாடுகள். அதே நேரத்தில் இந்த மூன்று நாடுகளும் சீனாவுடன் நெருங்கிய நட்புறவைப் பேணி வருவதுடன், அண்மைக் காலங்களில் ரஸ்யாவுடனும் நெருங்கிய நட்புக் கொள்ள ஆரம்பித்துள்ளன. இதில் அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் மீது கடுமையான கோபம் ஏற்படக் காரணமாய் அமைந்தது, ரஸ்யா உக்ரைன் மீது தாக்குதலை ஆரம்பித்த சமயத்தில் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் ரஸ்யாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்ததுதான்.

இந்திய – பாகிஸ்தான் பிரிவினையின் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையில் தொடர்ச்சியான பகைமை நீடித்து வருகிறது. ஆரம்பத்தில் அமெரிக்கா இரு நாடுகளுடனும் ஓரளவு சமமான உறவுகளைப் பேணி வந்தது. சோவியத் யூனியனில் ஸ்டாலின் மறைவுக்கு பின்னர் குருசேவ் அதிகாரத்துக்கு வந்து சோவியத் - சீன உறவுகள் சீர்குலையத் தொடங்கியதும், சீனாவுடன் எல்லைத் தகராறு கொண்டிருந்த இந்தியாவுடன் சோவியத் யூனியன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தத் தொடங்கியது. இந்தப் பின்னணியில் சீனாவும் அமெரிக்காவும் பாகிஸ்தானுடன் நெருங்கிய உறவைப் பேணத் தொடங்கின.

இந்தியாவில் இந்திராகாந்தி பிரதமராக இருந்த காலத்தில் சோவியத் யூனியனுடன் மிகவும் நெருக்கமான உறவுகளை ஏற்படுத்தினார். இரு நாடுகளுக்குமிடையில் பாதுகாப்பு ஒப்பந்தமும் செய்யப்பட்டது. அந்தத் துணிச்சலில் இந்தியா 1971 இல் கிழக்கு பாகிஸ்தானுக்கு தனது படைகளை அனுப்பி அதை “பங்களாதேஸ்” என்ற பெயரில் ஒரு தனி நாடாக்கி பாகிஸ்தானைப் பலவீனப்படுத்தியது. பாகிஸ்தானுக்கு ஆதரவளிக்கும் முகமாக அமெரிக்கா தனது “என்ரர்பிறைஸ்” என்ற போர்க் கப்பலை இந்தியாவுக்கு அருகில் அனுப்பிய போதும், அதனால்

மேற்கொண்டு எதுவும் செய்ய முடியாமல் போயிற்று.

இந்தியாவுடன் எப்போதும் போர்ச் சூழல் நிலவிய காரணத்தால் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சிகளே பெரும்பாலும் நிலவி வந்துள்ளன. சுல்பிகார் அலி பூட்டோதான் முதன் முதலாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட சிவிலியன் அரசாங்கத்தை நிறுவினார். ஆனால் அவரது ஆட்சியைக் கவிழ்த்த இராணுவத் தளபதி ஸியாவுல் ஹக் தானே நாட்டின் ஜனாதிபதியாகி பூட்டோவையும் தூக்கில் போட்டார். சில வருடங்கள் கழித்து பூட்டோவின் மகள் பெனாசிர் பாகிஸ்தான் பிரதமராகத் தெரிவான போதும் அவரும் எதிரணியினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தியாவில் பிரதமராக இருந்த இந்திராகாந்தி சீக்கிய பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட பின்பு அவரது மகன் ராஜீவ் காந்தி பிரதமரானார். அவரது காலத்தில் அமெரிக்காவின் பாகிஸ்தான் சார்பு கொள்கை படிப்படியாக மாறத் தொடங்கி, இந்தியாவில் அமெரிக்க சார்பு வலதுசாரி பாரதீய ஜனதா கட்சியின் அரசுகள் ஏற்பட்ட பின்பு, அமெரிக்கா பாகிஸ்தானை கைவிட்டு விட்டு இந்தியாவுடன் நெருக்கமான உறவுகளை வைக்கத் தொடங்கியது.

இத்தகைய ஒரு சூழலில்தான் முன்னாள் கிரிக்கெட் வீரரான இம்ரான் கான் தேர்தலில் வெற்றி பெற்று பாகிஸ்தான் பிரதமரானார். அவர் முன்னைய காலங்களைக் காட்டிலும் அதிகமான உறவுகளை சீனாவுடன் வைத்ததுடன், ரஸ்யாவுடனும் உறவுகளை வலுப்படுத்தத் தொடங்கினார். அத்துடன், அமெரிக்காவின் பாகிஸ்தான் விரோதப் போக்கையும் வெளிப்படையாக விமர்சிக்கத் தொடங்கினார். அவரது போக்கு அமெரிக்காவுக்குப் பிடிக்கவில்லை. அமெரிக்காவுக்கு ஒரு நாட்டின் ஆட்சி பிடிக்கவில்லை என்றால் இரண்டு வழிமுறைகளைக் கையாளும். நேரடி விரோத நாடு என்றால் பொருளாதார மற்றும் அரசியல் தடைகளை விதிக்கும். நேரடி விரோத நாடு அல்லாமல் தனக்கு எதிரான சீனா போன்ற நாடுகளுடன் ஒரு நாடு நெருங்கிய உறவைக் கொண்டிருந்தால், வேறு வழிகளில் அந்த நாடுகளில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும். 2015 இல் அவ்வாறுதான் இலங்கை ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ச தோற்கடிக்கப்பட்டார்.

பாகிஸ்தானில் தமக்கு பிடிக்காத இம்ரான் கானின் ஆட்சியை அகற்ற வேறு வழிமுறை கையாளப்பட்டுள்ளது. முதலில் இம்ரான் கானின் ஆட்சியில் பங்கு வகித்து வந்த ஒரு கட்சி அந்த ஆதரவில் இருந்து விலக்கி வைக்கப்பட்டது. அதனல் அவரது அரசு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்தது. அதைத் தொடர்ந்து எதிர்க் கட்சிகள் மூலம் அவரது அரசுக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஆட்சி கவிழக்கூடும் என அஞ்சிய இம்ரான் கான் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுவதற்கு முன்னதாக பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்குச் செல்லத் தயாரானார்.

ஆனால் எதிர்க்கட்சிகள் அவரது தீர்மானத்துக்கு எதிராக நீதிமன்றத்தை நாடினர். எதிர்க் கட்சிகளின் முறைப்பாட்டை விசாரித்த உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் அனைவரும் பாராளுமன்றத்தைக் கலைத்தது அரசியல் சாசனப்படி தவறானது என ஏகமனதாகத் தீர்ப்பளித்தனர். எனவே தவிர்க்க முடியாது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டு சொற்ப வாக்கு வித்தியாசத்தில் அவர் தோற்கடிக்கப்பட்டார்.

ஆனால் எது எப்படியிருப்பினும், பாகிஸ்தானில் எதிர்க்கட்சிகள் அரசியல் சாசனப்படியே செயல்பட்டு இம்ரான் கானைத் தோற்கடித்துள்ளனர். பொதுவாக 'பாகிஸ்தானில் ஜனநாயகம் இல்லை, சர்வாதிகாரம்தான் கோலோச்சுகிறது' எனக் கூறப்பட்டு வரும் நிலையில், வழமைபோல இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றாது பாராளுமன்ற ஜனநாயக முறையிலேயே ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பாகிஸ்தானோடு ஒப்பிடுகையில் இலங்கையில் தற்பொழுது நடைபெறும் போராட்டம் மிகவும் வித்தியாசமானது. ஒரு பக்கம் மக்களைத் தூண்டி விட்டு வன்முறை கலந்த வீதிப் போராட்டங்களை நடத்துகின்ற அதே வேளையில், எதிர்க் கட்சிகள் அவர்களுக்குப் பின்னால் நின்று கொண்டு ஜனாதிபதியும் அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என விடாப்பிடியாக வலியுறுத்துகின்றனர். அவர்கள் அரசியல் சாசன ரீதியாகவும், பாராளுமன்ற ஜனநாயகத்தின் ஊடாகவும் அரசாங்கத்தை மாற்றுவதற்குப் பதிலாக, வன்முறை மூலம் அரசாங்கத்தை அகற்றுவதற்கே முயல்கின்றனர். 'இலங்கை ஒரு ஜனநாயக நாடு' எனப் பெருமை பேசியவர்கள் இப்பொழுது தேர்தல் மூலம் சாதிக்க முடியாததை வன்முறை மூலம் சாதிக்க முயல்கின்றனர்.

ஆரம்பத்தில் தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராகவும், ராஜபக்ச குடும்பத்துக்கு எதிராகவும் எனக் கூறி போராட்டத்தை ஆரம்பித்தவர்கள், இப்பொழுது பாராளுமன்ற உறுப்பினர்களாகவுள்ள சகல கட்சிகளையும் சேர்ந்த 225 பேரும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர். இது அவர்கள் பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்பதையே காட்டுகிறது. அப்படியானால் இலங்கையில் இனிமேல் பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களே தேவையில்லையா? இதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் நிச்சயமாகப் பதில் சொல்ல வேண்டும். அத்துடன், இலங்கையில் என்ன வகையான அரசாங்கத்தை அவர்கள் விரும்புகிறார்கள் என்பதையும், அதை என்ன வழிகளில் அவர்கள் ஏற்படுத்தப் போகிறார்கள் என்பதையும், நாட்டு மக்களுக்கும் உலகிற்கும் தெரிவிக்க வேண்டும்.

தேசநலனைப் பார்க்காமல், தங்கள் சொந்த அரசியல் ஆதாயத்திற்காக இந்தச் சூழலைப் பலர் பயன்படுத்த முயற்சிக்கின்றனர். இது அரசியல் செய்வதற்கான நேரம் அல்ல. முழு இலங்கை சமூகத்திற்கும் இது மிகவும் கடினமான காலம். இருப்பினும், எதிர்க்கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்ற விரும்பினால், அவர்கள் பாராளுமன்றத்தில் தங்களிடம் உள்ள எண்ணிக்கையைக் காட்டட்டும். எந்த விதமான திட்டமும் இல்லாமல் வெறுமனே அராஜகத்தை மட்டும் நோக்கமாகக் கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்துபவர்களின் இந்த விபரீதமான போக்கு, சில வேளைகளில் இலங்கையில் இராணுவ ஆட்சி ஏற்படுவதற்கு வழிகோலினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# கியூபாவின் உயிரி மருத்துவப் புரட்சி!

கியூபா நாட்டில் பாடிஸ்டாவின் இராணுவ சர்வாதிகாரத்தை 1959 ஆம் ஆண்டு பிடல் காஸ்ட்ரோ தூக்கியெறிந்தபோது ஏற்பட்ட புரட்சிக்குப் பின் தற்போது அமைதியான மருத்துவப் புரட்சி ஏற்பட்டுள்ளது. கடந்த பத்தாண்டுகளில் கியூபாவின் உயிரி தொழில்நுட்பத் துறை, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ உதவி தேவைப்படும் நாடுகளுக்கு மருத்துவர்களை அனுப்பும் மருத்துவ சர்வதேசியம் போன்றவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி இந்த மருத்துவப் புரட்சிக்கு வித்திட்டது.

கோவிட் 19 நோய்த்தொற்றினை எதிர்த்துப் போராட ஐந்து தடுப்பூசிகளை உருவாக்கிய கியூபா, அந்நாட்டின் மக்கள்தொகையில் 93 சதவீதத்தினருக்கு அத்தடுப்பூசிகளை வழங்கி ஓர் இணையற்ற சாதனையினை நிகழ்த்தியுள்ளது. ஃபைசர் (Pfizer), மற்றும் மாடர்னா (Moderna) போன்ற புதிய மற்றும் விலையுயர்ந்த தூதனரி (எம்.ஆர்.என்.ஏ) தடுப்பூசிகளின் மேல் கவனம் செலுத்திய உலகம், கியூபாவின் இச்சாதனையினை கவனிக்கவில்லை. இச்சாதனைக்கு காரணமான கியூபா மரபணு பொறியியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையம் மற்றும் ஃபின்லே இன்ஸ்டிடியூட் ஆஃப் வேக்சின்ஸ் (Finlay Institute of Vaccines) ஆகியவற்றின் செயல்பாடுகளை ‘நேச்சர்’ (Nature) என்ற அறிவியல் இதழ் வெளியிட்டது.

உலகின் குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் தங்கள் நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்காக பணக்கார நாடுகளை எதிர்நோக்கி காத்திருக்கும் சூழலில், அறுபது ஆண்டுகளாக அமெரிக்காவின் வர்த்தகத் தடையினால் மெருகூட்டப்பட்ட கியூபா, கொரோனா தீநுண்மியினால் பாதிக்கப்பட்ட கரீபியன் தீவு மக்கள் மீண்டு வர தடுப்பூசிகளை அனுப்பியது. ஃபைசர் மற்றும் மாடர்னா போன்ற தடுப்பூசிகளைப் பற்றி கிட்டத்தட்ட அனைத்து ஊடகங்களும் செய்தி வெளியிட்ட சூழலில், 2021 ஆம் ஆண்டில் கியூபா உலகின் சில நாடுகளுக்கு தடுப்பூசிகளை அனுப்பிய செய்தியினை ‘ஹவானாவில் இருந்து வெளிவரும் நல்ல செய்தி’ என்ற தலைப்பில் இரண்டு செய்தி நிறுவனங்கள் மட்டுமே வெளியிட்டன.



கோவிட் 19 பாதித்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததால் உருவான அவசர நிலை காரணமாக, கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு இடையிலும் தங்கள் நாட்டு வளங்களையும் ஆராய்ச்சி திறனையும் மட்டுமே கொண்டு சொந்த தடுப்பூசிகளை உருவாக்க வேண்டும் என்ற உறுதியினை கியூபா எடுத்தது. ஓராண்டு கால முயற்சியின் விளைவாக 1.13 கோடி மக்கள் தொகை கொண்ட கியூபா ஐந்து தடுப்பூசிகளை உருவாக்கியது. இந்த ஐந்தில் நான்கு தடுப்பூசிகள் கொரோனா தீநுண்மிக்கு எதிராக 90 சதவீத பாதுகாப்பை வழங்குவதாக அந்நாடு கூறுகிறது.

*பேராசிரியர் தி. ஜெயராஜசேகர்*

2022 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் தேதி நிலவரப்படி, கியூபாவில் 86.54 சதவீதம் பேர் முழுமையாக மூன்று தவணை தடுப்பூசிகளை எடுத்துள்ளனர் என்றும் மேலும் 7 சதவீதம் பேருக்கு ஒன்று அல்லது இரண்டு தவணை தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளது என்றும் ‘அவர் வேர்ல்ட் இன் டேட்டா’ (Our World in Data) என்ற அறிவியல் இணையதளம் தெரிவித்துள்ளது. ஒரு சின்னஞ்சிறிய நாடு சொந்த தடுப்பூசிகளைத் தானே தயாரித்து, அதன் மக்கள்தொகையில் 90 சதவீதத்திற்கும் அதிகமானோருக்கு போடுவது ஒரு அசாதாரணமான விஷயம் என்றும், இது ஒரு நம்ப முடியாத சாதனை என்றும் கிளாஸ்கோ (Glasco) மற்றும் டல்ஹவுசி (Dulhousie) பல்கலைக்கழகங்களின் கல்வியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மிகவும் முன்னேறிய பணக்கார நாடுகள்கூட உயிரி தொழில்நுட்பத் துறையின் சாத்தியக்கூறுகள் குறித்து அறியாத மற்றும் புரியாத 1980 ஆம் ஆண்டு காலகட்டத்தில், காஸ்ட்ரோ இத்துறையில் யாரும் நம்பமுடியாத அளவில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்தார். அறிவுசார் சொத்துரிமை மூலம் தங்கள் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்குத் தடைகள் ஏற்படாத வகையில் உயிரி தொழில்நுட்ப அறிவியலை பகிர்ந்து கொள்ளத் தயாராக இருந்த அமெரிக்கா, பின்லாந்து மற்றும் கனடா நாட்டு ஆராய்ச்சி மையங்களுக்கு தங்கள் நாட்டு விஞ்ஞானிகளை முன்னாள் சோவியத் யூனியன் ஆராய்ச்சியாளர்களுடன் அனுப்பி வைத்தார்.

இதன் விளைவாக 1980 ஆம் ஆண்டுகளில் இருந்து தற்போது வரை உயிரி மருந்து (Bio-Pharma) கண்டுபிடிப்பு என்பது கியூபா நாட்டின் தனித்துவ அடையாளமாக இருந்து வருகிறது. ஈரல் அழற்சி (Hepatitis), இளம்பிள்ளைவாதம் (போலியோ) மற்றும் மூளைக்காய்ச்சல் போன்ற உயிருக்கு ஆபத்தான நோய்களுக்கு எதிராக குறைந்த விலை மருந்துகளைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சி கியூபாவில் ஏற்பட்டது.

உலகின் வேறெந்த நாட்டிலும் இல்லாத மையப்படுத்தப்பட்ட திட்டமிடல் அமைப்பு காரணமாக பொருளாதாரம் சார்ந்த முடிவுகளை கியூபா நாட்டு அரசினைத் தவிர வேறு யாரும் எடுக்கவோ செயல்படுத்தவதோ இயலாது. இச்சூழலில் தங்கள் நாட்டு மக்களின் அன்றாடத் தேவைகளுக்கு உருளைக்கிழங்கினை வழங்க இயலாத

காலகட்டத்திலும் பத்தாண்டுகளுக்குள் நாட்டினை மின்மயமாக்குவது, இரண்டரை ஆண்டுகளில் கல்வியறிவின்மையை ஒழிப்பது மற்றும் மருத்துவ சர்வதேசியம் போன்ற மிகப்பெருந் திட்டங்களை திறமையான முறையில் வடிவமைத்து செயல்படுத்தியது.

குறைந்த வருமானம் கொண்ட நாடுகள், அவர்களின் உயிரி தொழில்நுட்பத் திறனை மேம்படுத்துவதற்கும் உயிர் காக்கும் மருந்துகளை குறைந்த விலையில் உற்பத்தி செய்வதற்கும் ஏற்ற வகையில் உதவுவதற்கு உருவான தெற்கு–தெற்கு தொழில்நுட்ப மாற்று கொள்கையினை உலகளவில் நடைமுறைப்படுத்த கியூபா மிகப்பெரும் பணியாற்றிவருவதாக உலக சுகாதார மையம் கூறுகிறது. உலகின் தெற்கில் உள்ள வளரும் நாடுகளுக்கிடையேயான அறிவு வளங்கள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றம் குறித்து விவரிக்க வரலாற்று ரீதியாக கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கல்வியாளர்களால் பயன்படுத்தப்படும் பதமே தெற்கு–தெற்கு ஒத்துழைப்பு.

அறிவியல் கோட்பாடுகளை கற்பிக்க மற்றும் கற்றுக்கொள்ள கடைப்பிடிக்கப்படும் ஆழமான கல்வி முறை மற்றும் நாட்டின் சமூகநலனுக்கான பொருளாதார அடிப்படையில் சீரமைக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செயல்பாடுகள் உலகம் மதிக்கும் ஒரு சிறந்த மருத்துவ உயிரி தொழில்நுட்பத் துறையினை கியூபா உருவாக்க உதவியது. கியூபாவை விட 10 மடங்கு அறிவியல் மனித ஆற்றலைக் கொண்டுள்ள இந்தியாவில் ஆராய்ச்சிக்கு தேவையான பிற வளங்களும் அதிகம். ஆராய்ச்சிக்குத் தேவையான சூழல் இருக்கும்போதும் நம்மால் கியூபாவைப் போன்று பெருந்தொற்றுக்கு எதிரான தனித்துவமான தடுப்பூசிகளை உருவாக்க இயலவில்லை. தொற்றுநோயை எதிர்த்துப் போராடும் கியூபாவின் செயல் மற்ற நாடுகளுக்கு முன்னுதாரணமாக இருக்கின்றது.

---

**10ம் பக்கத்தொடர்ச்சி...**

அமைப்புகள் ஆஸாத் தலைமையிலான சிரிய அரசுக்கு எதிராக அமெரிக்க – ஐரோப்பிய யூனியன் – நேட்டோ என்பனவற்றின் ஆதரவுடன் கிளர்ச்சியில் ஈடுபடத் தொடங்கிய சூழலில் 22 அங்கத்துவ நாடுகள் கொண்ட அரபு லீக்கில் இருந்து சிரியா இடை நீக்கம் செய்யப்பட்டிருந்த சூழலில் தற்போதைய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

வளைகுடா நாடுகள் எப்பொழுதுமே தமது நாடுகளில் அமெரிக்காவும் அதன் மேற்கு நாட்டுக் கூட்டாளிகளும் படைகளையும் இராணுவத் தளங்களையும் வைத்திருப்பதற்கு ஆதரவு அளித்து வந்துள்ளன. ஆனால் இப்பொழுது அவை அதிலிருந்து படிப்படியாக விடுபட ஆரம்பித்திருப்பதையே அந்த நாடுகள் சிரியாவுடன் உறவுகளைப் புதுப்பிப்பதன் மூலம் காணக்கூடியதாகவுள்ளது. அது மாத்திரமின்றி, அவை இப்பொழுது அமெரிக்காவின் பிரதான எதிரி நாடுகளான ரஸ்யாவுடனும் சீனாவுடனும் அதிகமான நட்புறவைக் கொள்ள ஆரம்பித்துள்ளன. அமெரிக்கா, ரஸ்யா மீது விதித்த பொருளாதாரத் தடைகளையும் அவை ஆதரிக்கவில்லை.

இவையெல்லாவற்றையும் வைத்துப் பார்க்கும் பொழுது ஒரு காலத்தில் அமெரிக்காவின் ‘பொம்மைகளாக’ இருந்தவர்கள் இப்பொழுது விழித்தெழ ஆரம்பித்துவிட்டனர் போலும்.

**16ம் பக்கத்தொடர்ச்சி...**

சிந்திக்கவேண்டியது, இந்த நெருக்கடியிலிருந்து ஒன்றுபட்ட ரீதியாக நாம் மீண்டெழுவது எப்படி என்பதாகவே இருக்க வேண்டும். தேசிய பேரிடரின்போது வித்தியாசங்களை மறந்து ஒன்றிணைவதும் பின்னர் பழைய நிலைக்குத் திரும்பி அரசியல் செய்வதும் ஜனநாயக நாடுகளில் காணப்படும் ஒரு பொதுப்பண்பு. அதை இப்போது நாம் கைவிட்டு சுயலாபம் தேடுவதில் ஈடுபடலாகாது. ஒவ்வொருவரும் பிரச்சினையின் உண்மையான ஆழத்தை புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். அதற்கேற்றபடி ஒவ்வொருவரும் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். இரண்டாம் உலகப் போரின்போது இடுப்புப் பட்டியை இறுக்கிக் கொள்ளுங்கள் என்று ஹிட்லர் முசோலினியிடம் சொன்னதாகச் சொல்வார்கள். தவிர்க்க முடியாத தேசிய நெருக்கடி ஒன்றின்போது நெருக்கடி நிலைக்கு ஏற்ப தமது தேவைகளை குறைத்துக் கொள்வது அல்லது மாற்று வழிகளுக்குச் செல்வது வெட்கக் கேடான விஷயமல்ல. மிகவும் இயல்பானது. தேசிய கொடிக்கு எழுந்து நின்று மரியாதை செய்வதற்கு ஒப்பான ஒரு காரியமே, நெருக்கடி நிலையோடு பயணித்து அதில் இருந்து வெளிவரும் வரை தம்மை சூழ்நிலைகளுக்கு ஏற்றமாதிரி அதனுடன் பொருந்திப் போவதுமாகும்.

***-ஆசிரியர் தலையங்கம்***

தினகரன் வாரமஞ்சரி, 2022.04.24

---

**6ம் பக்கத்தொடர்ச்சி...**

சர்வதேச நிதியத்தின் நிர்வாக இயக்குநரான கிறிஸ்டலினா ஜோர்ஜீவா, “இந்தப் போரால் உலகளவில் 143 நாடுகளின் பொருளாதார நிலவரத்தில் தாக்கம் ஏற்படும். இந்த நாடுகள் தான் சர்வதேச ஜிடிபியில் 86% ஆதிக்கம் செலுத்துவதால் அவர்களின் பொருளாதார குறியீடுகள் சரிவது உலகளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்” என்று கூறியுள்ளார்.

இந்நிலையில், உக்ரைன் மீது ரஷ்யா 60 நாட்களைக் கடந்து தாக்குதல் நடத்தி வருகிறது. கிழக்கு உக்ரைன் பகுதியில் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ள, ரஷ்ய படைகள் அங்கு துறைமுக பகுதியான மரியுபோல் நகரை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளன.

எனினும் மரியபோல் நகரில் ஒரு இரும்பாலையில் அசோவ் பட்டாலியனைச் சேர்ந்த 2000 நாஜிக்கள், உக்ரைன் இராணுவத்தினர் மற்றும் வெளிநாட்டு வீரர்கள் சிக்கியுள்ளனர். உணவு, நீர் மட்டுமின்றி ஆயுதங்களும் குறைவாக அவர்களிடம் உள்ளதாக ரஷ்யாவால் இடைமறித்த ரேடியோ செய்திகள் கூறுகின்றன.

இந்நிலையில் ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சகம் விடுத்துள்ள செய்தியில், “மரியுபோல் நகரில் உள்ள உக்ரைன் வீரர்கள், ஆயுதங்களை கீழே போட்டு விட்டு சரணடைந்தால், அவர்களின் உயிர்களுக்கு நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம். சரணடைய மறுத்து தொடர்ந்து சண்டையிட்டால், முற்றிலும் அழித்துவிடுவோம்” என எச்சரிக்கை விடுத்துள்ளது. ஆனால், உக்ரைன் வீரர்கள் சரணடைய அந்நாட்டு இராணுவம் தடை விதித்திருப்பதாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் இகார் கோனாஷென்கோ கூறியுள்ளார்.

**முன்பக்கத்தொடர்ச்சி...**

பற்றாக்குறை ஏற்பட்டு அத்தியாவசிய பொருட்கள், மருந்து வகைகள், எரிபொருள் என்பவற்றை இறக்குமதி செய்து மக்களுக்கு வழமை போல வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

இலங்கைக்கு இந்த நிலைமை ஏற்பட்டதற்கு இன்றைய அரசாங்கமோ அல்லது ராஜபக்ச குடும்பமோ மட்டும் தனியான காரணங்கள் அல்ல. இன்றைய நெருக்கடிக்கு அவர்களும் ஒரு பங்காளிகள் மட்டுமே.

உண்மையில் இன்றைய நெருக்கடி நிலை ஏற்பட்டதற்கு உலக முதலாளித்துவ அமைப்பு முறையும், இலங்கையின் நவ காலனித்துவ பொருளாதார அமைப்பு முறையுமே அடிப்படைக் காரணங்கள். இலங்கையை ஆட்சி செய்த சகல முதலாளித்துவ அரசியல் கட்சிகளும், ஆட்சி செய்யாவிட்டாலும் முதலாளித்துவ முறையைப் பாதுகாத்த மற்றைய சகல கட்சிகளுமே இன்றைய நிலைக்குக் காரணகர்த்தாக்கள். ஆனால் திருடனே மற்றையவனைப் பார்த்து "திருடா" எனக் கூச்சல் போடுவது போல எதிர்க்கட்சியினர் இன்றைய நெருக்கடி நிலைக்கு தற்போதைய அரசாங்கமே முழுக் காரணம் என விரலை நீட்டுகின்றனர்.

ஒரு தவறான சமூக அமைப்பு முறை காரணமாக ஏற்பட்டுள்ள இன்றைய நெருக்கடி நிலைக்கு ராஜபக்ச குடும்பம்தான் முழுக் காரணமும் என்ற வாதமும் ஏற்கக் கூடியது அல்ல. கடந்த காலத்தில் அதிகாரத்தில் இருந்த சகல அரசியல்வாதிகளும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார்கள். சிலர் மீது வழக்குகளும் கூட நடந்திருக்கின்றன. ஆனால் யாராவது தண்டிக்கப்பட்டிருக்கிறார்களோ என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அந்த வகையில், அரசியலில் ஈடுபட்ட ராஜபக்ச குடும்ப உறுப்பினர்கள் சிலரும் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டிருக்கலாம். ஆனால், நாட்டின் சொத்துகள் அனைத்தையும் தனியொரு குடும்பம் திருடியதால்தான் நாடு திவாலடைந்து போனது என்ற வாதம் யதார்த்தமானது அல்ல. 2015 இற்கு முன்னரும் ஆட்சியில் இருந்த ராஜபக்ச அரசாங்கம் மீதும் இவ்வாறான குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டன. ஆனால், 2015 இல் 'நல்லாட்சி' என்ற பெயரில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் அமைந்தது. அந்த ஆட்சியில் ராஜபக்ச குடும்ப அங்கத்தவர்கள் மீதும், அவரது ஆட்சியில் இருந்த சில அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் மீதும் ஊழல் மோசடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு நீதிமன்றங்களில் பல வழக்குகள் போடப்பட்டதுடன், விசேட ஆணைக்குழுக்கள் அமைத்து விசாரணைகளும் நடத்தப்பட்டன. ஆனால் ஒரு குற்றச்சாட்டாவது இன்றுவரை நிரூபிக்கப்படவில்லை.

மாறாக, நல்லாட்சி அரசாங்கத்தால், குறிப்பாக பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்காவால், தனது நெருங்கிய நண்பரான அர்ச்சுனா மகேந்திரன் என்பவரை மத்திய வங்கி ஆளுநராக நியமித்து, அவர் வங்கியின் பல்லாயிரக்கணக்கான கோடி பணத்தைக் கொள்ளையடித்துக் கொண்டு போய் சிங்கப்பூரில் சொகுசாக வாழ்க்கிறார். அவரை இன்றைய அரசாங்கத்தாலோ, சிங்கப்பூர் அரசாங்கத்தாலோ அல்லது 'இண்டபோல்' என்ற சர்வதேச பொலிஸ் பிரிவினராலோ இலங்கைக்குக் கொண்டு வந்து விசாரணை நடத்த முடியவில்லை. இன்றைய பொருளாதார நெருக்கடிக்காக வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்வோர் மகேந்திரன் இலங்கையில் ஏற்படுத்திவிட்டுப் போன பொருளாதார நெருக்கடி குறித்து மறந்து விட்டே ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

இன்றைய நெருக்கடிக்கு அரசாங்கத்தின் கொள்கைகள்தான் காரணம் எனக் குற்றச்சாட்டுகளை முன் வைப்பவர்கள் அரசாங்கத்தின் எத்தகைய கொள்கைகளால் இந்த நிலைமை உருவானது என்பதைத் தெளிவாக ஏன் வைக்கிறார்கள் இல்லை? அதேபோல, ராஜபக்ச குடும்பத்தின் ஊழல் மோசடிகளால்தான் இந்த நிலைமை உருவானது எனக் குற்றச்சாட்டுகளை அடுக்குபவர்கள் அவர்கள் செய்த ஊழல் மோசடிகள் எவை என்பதை ஏன் தெளிவாகக் குறிப்பிடுகிறார்கள் இல்லை? மொட்டையாக குற்றச்சாட்டுகளை முன்வைத்து விட்டு, 'அரசாங்கத்தை விட்டுப் போ' என்றால் பிரச்சினைகள் தீர்ந்து விடுமா?

அது தவிர, ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும், 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பதவி விலகக் கோருபவர்கள், அதன் பின் எவ்வாறு ஒரு அரசாங்கத்தை மீண்டும் உருவாக்கப் போகிறார்கள்? அல்லது அரசாங்கமே இல்லாமல் நாட்டை ஆளப் போகிறார்களா? அப்படி ஆள்பவர்கள் யார் யார்? தவிர இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு எவ்வாறான தீர்வை அவர்கள் காணப் போகிறார்கள்? இந்தக் கேள்விகளுக்கு அவர்களுடைய பதில் என்ன? ஆட்சி மாற்றத்தைக் கோருபவர்கள் ஏன் தமது திட்டங்களை நாட்டு மக்கள் முன்பாக வெளிப்படையாக வெளியிடவில்லை?

உண்மை என்னவென்றால், இப்பொழுது ஆட்சி மாற்றத்தைக் கோருபவர்கள் உண்மையான சமூக மாற்றத்தைக் கோரவில்லை. ஆட்சி மாற்றம் கோருபவர்களும் இன்றைய முதலாளித்துவக் கட்டமைப்பின் அங்கத்தவர்களும் பாதுகாவலர்களுமே. அவர்களது கோரிக்கை, நோக்கம் எல்லாம் தற்பொழுது ஆட்சியில் இருக்கும் நபர்களை அகற்றிவிட்டு தம்மை அந்த இடத்தில் இருத்துவதே தவிர, இன்றைய முதலாளித்துவ சமூக கட்டமைப்பை மாற்றி அந்த இடத்தில் ஒரு சமதர்ம, நீதியான ஆட்சியமைப்பை உருவாக்கி, நாட்டைத் தன்னிறைவுப் பொருளாதாரத்தில் வளர்த்தெடுத்து, மக்கள் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதல்ல.

உண்மையில் இன்றைய உலக முதலாளித்துவ கட்டமைப்பு முறையினாலும், அதனுடன் பின்னிப் பிணைந்த இலங்கையின் முதலாளித்துவக் கட்டமைப்பு முறையாலும் இலங்கை மக்கள் பல விதமான பொருளாதாரத் துன்பங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பது மறுக்க முடியாத உண்மை. அதன் காரணமாக அவர்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வுகாணக் கோரிப் போராடுவது இயல்பானதும் தவறற்றதுமாகும்.

ஆனால், அவர்களது போராட்டங்களைப் பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்துக்கு வருவதற்கு சில சுயநல அரசியல் சக்திகள் ஒரு பக்கத்தில் முயல்கின்றனர். மறுபக்கத்தில் இலங்கையின் ஸ்திரத்தன்மையை நிலைகுலைய வைத்து, அதன் மூலம் நாட்டை ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் காலடியில் விழ வைத்து, இலங்கையை தமது ஆதிக்க நோக்கத்தின் ஆடுகளமாக்க சில அந்நிய சக்திகள் முயல்கின்றன. இதுதான் இலங்கையில் தற்போது நடைபெற்று வரும் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் பின்னணி.

வெவ்வேறு அரசியல் நோக்கம் கொண்டவர்களால் பின்னணியில் இருந்து இயக்கப்படும் இந்த ஆர்ப்பாட்டங்களில் மக்கள் வெறும் பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பது மட்டுமே உண்மை. காலம் வெகுவிரைவில் இதை நிரூபிக்கும்.

# தேசிய நெருக்கடிக்கான போராட்டம் களியாட்டமல்ல



எமது நாடு வரலாறு சந்தித்திராத மிக மோசமான நெருக்கடியை சந்தித்திருக்கிறது. கடுமையான பொருளாதார வீழ்ச்சியால் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடும் வேகமான விலை அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது. இந்நிலை இவ்வாறே தொடர விடப்படுமானால் மீண்டெழ முடியாத ஒரு நிலைக்கு நாடு சென்று விட முடியும்.

எமது எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்க்கையையும் அது பெரிதும் பாதித்துவிடமுடியும். எனவே நாம் தற்போது கடந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு பொழுதும் மிக முக்கியமானது. இதை ஆக்கபூர்வமாக பயன்படுத்தி எவ்வாறு நாட்டை மீட்டெடுப்பது என்பதில் அரசியல்வாதிகள் மட்டுமல்ல, ஒவ்வொரு குடிமகனுக்கும் பொறுப்புள்ளது என்பதை அழுத்தமாக சொல்ல விரும்புகிறோம்.

இன்று நாடெங்கும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. பெரும்பாலும் பொருட்கள் கிடைக்காததால் இப்போராட்டங்கள் நடைபெறும் அதே சமயம் அவை அரசுக்கு எதிரானவையாகவும் மாறி வருகின்றன. ஒரு ஜனநாயக நாட்டில் மக்களுக்கான வசதிகள், வாய்ப்புகள் குறைவடையும் போது மக்களின் ஆத்திரம் ஆளும் அரசாங்கத்தின் மீது திரும்புவது இயல்பு. இத்தருணத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் முனைப்புடனும், துரிதமாகவும் புத்திபூர்வமாகவும் செயல்பட வேண்டியது அவசியம். பாராளுமன்றம் கூடிய இரண்டு தடவைகளிலும் அந்த அமர்வுகள் பொதுமக்களுக்கு திருப்தி அளிக்கக்கூடியதாக அமையவில்லை. ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதைத் தவிர மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுகின்ற மாதிரியாக அவை இல்லை. தாம் எவ்வாறு எவ்வளவு விரைவில் சிக்கல்களிலிருந்து மீண்டு வருவோம் என்பதும் சகஜநிலைக்கு நாடு என்று திரும்பும் என்பதுமே மக்கள் எதிர்பார்ப்பாக இருக்கையில், பாராளுமன்றத்தில் நாட்கள் இழுத்தடிக்கப்படும்போது போராட்டங்கள் வன்முறையாக வடிவெடுக்கக் கூடிய வாய்ப்புகள் அதிகரிக்க முடியும்.

ரம்புக்கனை போராட்டத்தைப் போல சம்பவங்கள் மேலும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்துவது அரசின் கைகளில் மாத்திரமின்றி எதிர்க்கட்சிகளிடமும் இப்பொறுப்பு உள்ளது. கட்சிகள் தீயில் எண்ணெய் வார்க்கக்கூடாது. இத்தகைய சம்பவங்கள் மேலும் நிகழ்வதை ஊக்கப்படுத்துவதாகவும் இருக்கக்கூடாது. இப் பொருளாதார சரிவுக்கு இலங்கையை ஆண்ட அனைத்து கட்சிகளும் பொறுப்பேற்க வேண்டும். இவ்வாறு ஒரு பரந்த பார்வையை கட்சிகள் கொண்டால் மாத்திரமே எதிர்காலத்தில் உண்மையான நல்லாட்சியை உருவாக்கக் கூடியதாக இருக்கும். இவ்வளவு காலமும் பயணித்த பாதை எவ்வாறெல்லாம் தவறானதாக அமைந்திருந்தது என்பதை நுணுக்கமாகப் பார்த்துக் கொண்டிருக்காமல், இப் பூஜ்ஜியத்திலிருந்து, புதிய அரசியல் சிந்தனையுடனும், இனவாத, மதவாத சிந்தனைகளுக்கு அப்பாலும் ஒரு ஆழமானதும். ஸ்திரமானதுமான பொருளாதாரத்தை நாட்டில் எவ்வாறு கட்டி எழுப்புவது என்பது தொடர்பான விவாதங்கள் பரவலாக நடைபெற வேண்டியது அவசியம். ஏனெனில் தற்போதைய விவாதங்கள் இன்றைய நெருக்கடி சூழலை அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்துப் பார்ப்பதை மையமாகக் கொண்டிருக்கின்றனவே தவிர, எதிர்கால இலங்கையை முன்நிறுத்துவதாக இல்லை. நாட்டின் உடனடிப் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கலாம் என்பதையும் கூடவே புதிய பொருளாதாரக் கட்டமைப்புகளை எவ்வாறு அமைப்பதென்பதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டிய காலம் இது.

பாராளுமன்றம் பிரச்சினையில் அடுத்ததாக என்ன செய்யப் போகிறதென்பது ஒரு புறமிருக்க, நாட்டின் பல பகுதிகளில் நடைபெறும் வீதிப் போராட்டங்களும் வன்முறை வடிவெடுக்கக் கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன. ஏற்கனவே துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளார். விஷமிகள் புகுந்து விளையாடினால் ஏனைய சமாதான எதிர்ப்புப் போராட்டங்களும் வன்முறை வடிவெடுக்கலாம். பலர் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் உணர்வு ரீதியாகப் பங்கெடுக்காமல் ஒரு பொழுது போக்கல்லது களியாட்ட மனநிலையில் கலந்து கொள்வதையும் காண முடிகிறது. காலி முகத்திடல் தொடர் போராட்டத்தில் இம் மனநிலையை காணலாம்.

ஆனால் நிச்சயமாக இது களியாட்டத்துக்கான அரசியல் களம் அல்ல. அரசியல் கட்சிகளும் மக்களும்

**தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...**